# tirumantiram of tirumUlar - part IIIa
# (in Tamil Script, Unicode/UTF-8 format)

திருமந்திரம்- (திருமூலர்)
ஏழாம் தந்திரம் **(1704- 2121)**

---

This webpage with Tamil Text is based on Unicode encoding.
To view the Tamil text correctly you need to set up the following:

i). You need to have Unicode fonts containing Tamil Block (Latha, Arial Unicode MS, TSCu_Inaimathi, Code2000, UniMylai,...) installed on your computer
and the OS capable of rendering Tamil Scripts (Windows 2000 or Windows XP).

ii)Use a browser that is capable of handling UTF-8 based pages

(Netscape 6, Internet Explorer 5) with the Unicode Tamil font chosen as the default font for the UTF-8 char-set/encoding view.

.
In case of difficulties send an email request to kalyan@geocities.com or kumar@vt.edu

C - Project Madurai 2002
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website
**http://www.projectmadurai.org/**
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

# திருமந்திரம்

## ஏழாம் தந்திரம்

### 1. ஆறு ஆதாரம்

1704
நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறும்
கோவிமேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலம் கண்டு ஆங்கே முடிந்து முதல் இரண்டும்
காலங்கண் டான்அடி காணலும் ஆமே. 1

1705

ஈராறு நாதத்தில் ஈரெட்டாம்
அந்தத்தின்
மேதாதி நாதாந்த மீதாம் பாராசக்தி
போதா லயத்துஅ
விகாரந்தனிற்போத
மேதாதி ஆதார மீதான உண்மையே.
2

1706
மேல்என்றும் கீழ்என்று இரண்டற்
காணுங்கால்
தான்என்றும் நான்என்றும் தன்மைகள்
ஓராறும்
பார்எங்கும் ஆகிப் பரந்த பராபரம்
கார்ஒன்று கற்பகம் ஆகிநின்றானே. 3

1707
ஆதார சோதனை யால்நாடி சுத்திகள்

மேதாதி ஈரெண் காலந்தத்து
விண்ணொளி
போதா லயத்துப் புலன்கர ணம் புத்தி
சாதா ரணங்கெட்டான் தான்சக
மார்க்கமே. 4

1708
மேதாதி யாலே விடாதுஓம்
எனத்தூண்டி
ஆதார சோதனை அத்துவ சோதனை
தாதுஆர மாசுவே தானெழச்
சாதித்தால்
ஆதாரஞ் செய்போக மாவது
காயமே. 5

1709
ஆறந்த மும்கூடி யாரும் உடம்பினில்
கூறிய ஆதார மற்றும்

குறிக்கொண்மின்
ஆறிய அக்கரம் ஐம்பதின் மேலே
ஊறிய ஆதாரத்து ஓரெழுத்து ஆமே.
6

1710
ஆகும் உடம்பும் அழிகின்ற
அவ்வுடல்
போகும் உடம்பும் பொருந்திய
வாறுதான்
ஆகிய அக்கரம் ஐம்பது தத்துவம்
ஆகும் உடம்புக்கும் ஆறந்த மாமே.
7

1711
ஆயு மலரின் அணிமலர் மேலது
ஆய இதழும் பதினாறும் அங்குள
தூய அறிவு சிவானந்த மாகிப்போய்

மேய அறிவாய் விளைந்தது தானே. 8

## 2. அண்டலிங்கம் (உலக சிவம்)

1712
இலிங்கம தாவது யாரும் அறியார்
இலிங்கம தாவது எண்டிசை எல்லாம்
இலிங்கம் தாவது எண்ணெண்
கலையும்
இலிங்கம தாக எடுத்தது உலகே. 1

1713
உலகில் எடுத்தது சத்தி முதலா
உலகில் எடுத்தது சத்தி வடிவாய்
உலகில் எடுத்தது சத்தி குணமாய்
உலகில் எடுத்த சதாசிவன் தானே. 2

1714
போகமும் முத்தியும் புத்தியும்
சித்தியும்
ஆகமும் ஆறாறு தத்துவத்து
அப்பாலாம்
ஏகமும் நல்கி இருக்கும் சதாசிவம்
ஆகம அத்துவா ஆறும் சிவமே. 3

1715
ஏத்தினர் எண்ணிலி தேவர்எம்
ஈசனை
வாழ்த்தினர் வாசப் பசுந்தென்றல்
வள்ளலென்று
ஆர்த்தினர் அண்டங் கடந்து அப்
புறநின்று
காத்தனன் என்னும் கருத்தறி யாரே. 4

1716

ஒண்சுட ரோன் அயன் மால்பிர
சாபதி
ஒண்சுட ரான இரவியோடு இந்திரன்
கண்சுட ராகிக் கலந்தெங்கும்
தேவர்கள்
தண்சுட ராய்எங்கும் தற்பரம் ஆமே.
5

1717
தாபரத் துள்நின்று அருளவல்
லான்சிவன்
மாபரத் துண்மை வழிபடு வாரில்லை
மாபரத் துண்மை வழிபடு
வாளர்க்கும்
பூவகத்து உள்நின்ற பொற்கொடி
யாகுமே. 6

1718

தூவிய விமானமும் தூலமது
ஆகுமால்
ஆய சதாசிவம் ஆகுநற் சூக்குமம்
ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்து
கொள்வார்கட்கே. 7

1719

முத்துடன் மாணிக்கம் மொய்த்த
பவளமும்
கொத்தும்அக்கொம்பு சிலைநீறு
கோமளம்
அத்தன்தன் ஆகமம் அன்னம்
அரிசியாம்
உய்த்த்தின் சாதனம் பூமண லிங்கமே.
8

1720

துன்றும் தயிர்நெய் பால்துய்ய
மெழுகுடன்
கன்றிய செம்பு கனல்இர தம்சலம்
வன்திறல் செங்கல் வடிவுடை
வில்வம்பொன்
தென்தியங்கு ஒன்றை தெளிசிவ
லிங்கமே. 9

1721
மறையவர் அர்ச்சனை வண்படி
கந்தான்
இறையவர் அர்ச்சனை யேயபொன்
னாகும்
குறைவிலா வசியர்க்குக் கோமள
மாகும்
துறையடைச் சூத்திரர் தொல்வாண
லிங்கமே. 10

1722
அது வுணர்ந் தோன்ஒரு தன்மையை நாடி
எதுஉண ராவகை நின்றனன் ஈசன்
புதுஉணர் வான புவனங்கள் எட்டும்
இது உணர்ந்து என்னுடல் கோயில்கொண்டானே. 11

1723
அகலிட மாய்அறி யாமல் அடங்கும்
உகலிட மாய்நின்ற ஊனதன் உள்ளே
பகலிட மாம்முனம் பாவ வினாசன்
புகலிட மாய்நின்ற புண்ணியன் தானே. 12

1724
போது புனைசூழல் பூமிய தாவது
மாது புனைமுடி வானக மாவது

நீதியுள் ஈசன் உடல்விசும்
பாய்நிற்கும்
ஆதியுற நின்றது அப்பரி சாமே. 13

1725
தரையுற்ற சத்தி தனிலிங்கம்
விண்ணாம்
திரைபொரு நீரது மஞ்சன சாலை
வரைதவழ் மஞ்சுநீர் வானுடு மாலை
கரையற்ற நந்திக் கலையும்திக்காமே.
14

## 3. பிண்டலிங்கம் (உடற் சிவம்)

1726
மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்

மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே.
1

1727
உலந்திலர் பின்னும் உளரென நிற்பர்
நிலந்திரு நீர்தெளி யூனவை செய்யப்
புலந்திரு பூதங்கள் ஐந்தும் ஒன்றாக
வலந்தரு தேவரை வந்திசெய் யீரே. 2

1728
கோயில்கொண் டன்றே குடிகொண்ட
ஐவரும்
வாயில்கொண் டாங்கே வழிநின்
றருளுவர்
தாயில்கொண் டாற்போல்
தலைவன்என் உட்புக
வாயில்கொண் டு ஈசனும் ஆளவந்
தானே. 3

1729
கோயில்கொண் டான்அடி
கொல்லைப் பெருமறை
வாயில்கொண் டான்அடி நாடிகள்
பத்துள
பூசைகொண் டான்புலன் ஐந்தும்
பிறகிட்டு
வாயில்கொண் டான் எங்கள் மாநந்தி
தானே. 4

4. சதாசிவ லிங்கம் (உலக முதற்
சிவம்)

1730
கூடிய பாதம் இரண்டும் படிமிசை
பாடிய கையிரண்டு எட்டுப்
பரந்தெழும்

தேடு முகம்ஐந்து செங்கையின்
மூவைந்து
நாடும் சதாசிவம் நல்லொளி முத்தே.
1

1731
வேதா நெடுமால் உருத்திரன்
மேலீசன்
மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்
ஆதார சத்தியும் அந்தச் சிவனொடும்
சாதா ரணமாம் சதாசிவந் தானே. 2

1732
ஆகின்ற சத்தியின் உள்ளே
கலைநிலை
ஆகின்ற சத்தியின் உள்ளே கதிரெழ
ஆகின்ற சத்தியின் உள்ளே
அமர்ந்தபின்

ஆகின்ற சத்தியுள் அத்திசை பத்தே. 3

1733
அத்திசைக் குள்ளே அமர்ந்தன
ஆறங்கம்
அத்திசைக் குள்ளே அமர்ந்தன
நால்வேதம்
அத்திசைக் குள்ளே அமர்ந்த
சரியையோடு
அத்திசைக் குள்ளே அமர்ந்த
சமயமே. 4

1734
சமயத்து எழுந்த அவத்தையீர்
ஐந்துள
சமயத்து எழுந்த இராசி ஈராறுள
சமயத்து எழுந்த சரீரம்ஆ றெட்டுள
சமயத்து எழுந்த சதாசிவந் தானே. 5

1735
நடுவு கிழக்குத் தெற்குஉத் தரமேற்கு
நடுவு படிகநற் குங்குமவன்னம்
அடைவுள அஞ்சனம் செவ்வரத்
தம்பால்
அடியேற்கு அருளிய முகம்இவை
அஞ்சே. 6

1736
அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினொ டுஅஞ்சு கரதலம் தானுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள
நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றானே.
7

1737

சத்தி தராதலம் அண்டம் சதாசிவம்
சத்தி சிவமிக்க தாபர சங்கமம்
சத்தி உருவம் அருவம் சதாசிவம்
சத்தி சிவதத்துவ முப்பத் தாறே. 8

1738

தத்துவ மாவது அருவம் சராசரம்
தத்துவ மாவது உருவம் சுகோதயம்
தத்துவம் எல்லாம் சகலமு
மாய்நிற்கும்
தத்துவம் ஆகும் சதாசிவம் தானே. 9

1739

கூறுமின் ஊறு சதாசிவன் எம்இறை
வேறோர் உரைசெய்து மிகைப்பொரு
ளாய்நிற்கும்
ஏறுரை செய்தொழில் வானவர்
தம்மொடு

மாறுசெய் வான் என் மனம்புகுந்
தானே. 10

1740
இருளார்ந்த கண்டமும் ஏந்து மழுவும்
சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப்
பிறையும்
அருளார்ந்த சிந்தையெம் ஆதிப்
பிரானைத்
தெருளார்ந்தென் உள்ளே
தெளிந்திருந் தேனே. 11

1741
சத்திதான் நிற்கின்ற ஐம்முகம்
காற்றிடில்
உத்தமம் வாமம் உரையத்து
இருந்திடும்
தத்துவம் பூருவம் தற்புரு டன்சிரம்

அத்தரு கோரம் மருடத்துஈ சானனே.
12

1742
நாணுநல் ஈசானன் நடுவுச்சி
தானாகும்
தாணுவின் தன்முகம் தற்புருட மாகும்
காணும் அகோரம் இருதயம்
குய்யமாம்
மாணுற வாமம்ஆம் சத்திநற் பாதமே.
13

1743
நெஞ்சு சிரம்சிகை நீள்கவ
சம்கண்ணாம்
வஞ்சமில் விந்து வளர்நிறம்
பச்சையாம்
செஞ்சுறு செஞ்சுடர் சேகரி

மின்னாகும்
செஞ்சுடர் போலும் தெசாயுதம்
தானே. 14

1744
எண்ணில் இதயம் இறைஞான
சத்தியாம்
விண்ணிற் பரைசிரம் மிக்க
சிகையாதி
வண்ணங் கவசம் வனப்புடை
இச்சையாம்
பண்ணுங் கிரியை பரநேந் திரத்திலே.
15

1745
சத்திநாற் கோணம் சலமுற்று
நின்றிடும்
சத்திஅறு கோண சயனத்தை

உற்றிடும்
சத்தி வட்டம் சலமுற்று இருந்திடும்
சத்தி உருவாம் சதாசிவன் தானே. 16

1746
மான் நந்தி எத்தனை காலம்
அழைக்கினும்
தான் நந்தி அஞ்கின் தனிச்சுடை
ராய்நிற்கும்
கால் நந்தி உந்தி கடந்து கமலத்தில்
மேல் நந்தி ஒன்பதின் மேவிநின்
றானே. 17

1747
ஒன்றிய வாறும் உடலின்
உடன்கிடந்து
என்றும்எம் ஈசன் நடக்கும் இயல்பது
தென்தலைக்கு ஏறத் திருந்து சிவனடி

நின்று தொழுதேன் என் நெஞ்சத்தின் உள்ளே. 18

1748
உணர்ந்தேன் உலகினில் ஒண்பொரு ளானைக்
கொணர்ந்தேன் குவலயம் கோயிலென் நெஞ்சம்
புணர்ந்தேன் புனிதனும் பொய்யல்ல மெய்யே
பணிந்தேன் பகலவன் பாட்டும் ஒலியே. 19

1749
ஆங்கவை Y மூன்றினும் ஆரழல் வீசிடத்
தாங்கிடும் ஈரேழு தான்நடு வானதில்
ஓங்கிய ஆதியும் அந்தமும் ஆமென

ஈங்கிவை தம்முடல் இந்துவும்
ஆமே. 20

1750
தன்மேனி தற்சிவ லிங்கமாய்
நின்றிடும்
தன்மேனி தானும் சதாசிவ
மாய்நிற்கும்
தன்மேனி தற்சிவன் தற்சிவா
னந்தமாய்
தன்மேனி தானாகும் தற்பரம் தானே.
21

1751
ஆரும் அறியார் அகாரம்
அவனென்று
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டும் தரணி முழுதுமாய்

மாறி எழுந்திடும் ஓசையதாமே. 22

1752
இலிங்கநற் பீடம் இசையும்ஓங் காரம்
இலிங்கநற் கண்டம் நிறையும்
மகாரம்
இலிங்கத்து உள் வட்டம் நிறையும்
உகாரம்
இலிங்கம் அகாரம் நிறைவிந்து
நாதமே. 23

## 5. ஆத்மலிங்கம் (உயிர்ச்சிவம் )

1753
அகார முதலா அனைத்துமாய்
நிற்கும்
உகார முதலா உயிர்ப்பெய்து நிற்கும்
அகார உகாரம் இரண்டும் அறியில்

அகார உகாரம் இலிங்கம் தாமே. 1

1754
ஆதாரம் ஆதேயம் ஆகின்ற
விந்துவும்
மேதாதி நாதமும் மீதே விரிந்தன
ஆதார விந்து ஆதிபீட நாமே
போதாஇ லிங்கப் புணர்ச்சிய தாமே.
2

1755
சத்தி சிவமாம் இலிங்கமே தாபரம்
சத்தி சிவமாம் இலிங்கமே சங்கமம்
சத்தி சிவமாம் இலிங்கம் சதாசிவம்
சத்தி சிவமாகும் தாபரம் தானே. 3

1756
தானேர் எழுகின்ற சோதியைக்

காணலாம்
வானோர் எழுகின்ற ஐம்பது
அமர்ந்திடம்
பூரேர் எழுகின்ற பொற்கொடி
தன்னுடன்
தானோர் எழுகின்ற அகாரமது ஆமே.
4

1757
விந்துவும் நாதமும் மேவும்
இலிங்கமாம்
விந்துவ தேபீட நாதம் இலிங்கமாம்
அந்த இரண்டையும் ஆதார
தெய்வமாய்
வந்து கருஐந்தம் செய்யும்
அவைஐந்தே. 5

1758

சத்திநற் பீடம் தகுநல்ல ஆன்மா
சத்திநற் கண்டம் தகுவித்தை
தானாகும்
சத்திநல் லிங்கம் தகும்சிவ தத்துவம்
சத்திநல் ஆன்மாச் சதாசிவம் தானே.
6

1759
மனம்புகுந்து என்னுயிர் மன்னிய
வாழ்க்கை
மனம்புகுந்து இன்பம் பொழிகின்ற
போது
நலம்புகுந்து என்னொடு நாதனை
நாடும்
இனம்புகுந்து ஆதியும்
மேற்கொண்டவாறே. 7

1760

பராபரன் எந்தை பனிமதி சூடி
தராபரன் தன்னடி யார்மனக் கோயில்
சிராபரன் தேவர்கள் சென்னியின்
மன்னும்
அராபரன் மன்னி மனத்துஉறைந்
தானே. 8

1761
பிரான்அல்ல நாம்எனில் பேதை
உலகம்
குரால்என்னும் என்மனம்
கோயில்கொள் ஈசன்
அராநின்ற செஞ்சடை அங்கியும்
நீரும்
பொராநின் றவர்செய்அப்
புண்ணியன் தானே. 9

1762

அன்று நின் றான்கிடந் தான்அவன்
என்று
சென்றுநின்று எண்டிசை ஏத்துவர்
தேவர்கள்
என்றுநின்று ஏத்துவன் எம்பெரு
மான்தன்னை
ஒன்றியென் உள்ளத்தின் உள்ளிருந்
தானே. 10

## 6. ஞான லிங்கம் (உணர்வுச் சிவம் )

1763
உருவும் அருவும் உருவோடு
அருவும்
மருவு பரசிவன் மன்பல் உயிர்க்கும்
குருவு மெனநிற்கும் கொள்கையன்
ஆகும்
தருவென நல்கும் சதாசிவன் தானே.

1

1764
நாலான கீழது உருவம் நடுநிற்க
மேலான நான்கும் அருவம்
மிகுநாப்பண்
நாலான ஒன்றும் அருவுரு
நண்ணலால்
பாலாம் இவையாம் பரசிவன் தானே.
2

1765
தேவர் பிரானைத் திசைமுக நாதனை
நால்வர் பிரானை நடுவுற்ற நந்தியை
ஏவர் பிரான்என்று இறைஞ்சுவர்
அவ்வழி
யாவர் பிரானடி அண்ணலும் ஆமே.
3

1766
வேண்டிநின் றேதொழு தேன்வினை
போயற
ஆண்டொரு திங்களும் நாளும்
அளக்கின்ற
காண்டகை யானொடும் கன்னி
உணரினும்
மூண்டகை மாறினும் ஒன்றது வாமே.
4

1767
ஆதி பரந்தெய்வம் அண்டத்து
நல்தெய்வம்
சோதி அடியார் தொடரும்
பெருந்தெய்வம்
நீதியுள் மாதெய்வம் நின்மலர்
எம்இறை

பாதியுள் மன்னும் பராசத்தி யாமே. 5

1768
சத்திக்கு மேலே பராசத்தி தன்னுள்ளே
சுத்த சிவபதம் தோயாத தூவொளி
அத்தன் திருவடிக்கு அப்பாலைக்கு
அப்பாலாம்
ஒத்தவும் ஆம்ஈசன் தானான
உண்மையே. 6

1769
கொழுந்தினைக் காணில் குவலயம்
தோன்றும்
எழுந்திடம் காணில் இருக்கலும்
ஆகும்
பரந்திடம் காணில் பார்ப்பதி மேலே
திரண்டெழக் கண்டவன் சிந்தையு
ளானே. 7

1770
எந்தை பரமனும் என்னம்மை
கூட்டமும்
முந்த உரைத்து முறைசொல்லின்
ஞானமாம்
சந்தித்து இருந்த இடம்பெருங்
கண்ணியை
உந்தியின் மேல்வைத்து உகந்து
இருந்தானே. 8

1771
சத்தி சிவன்விளை யாட்டாம்
உயிராகி
ஒத்த இருமாயா கூட்டத்து
இடையூட்டிச்
சுத்தம தாகும் துரியம் பிறிவித்துச்
சித்தம் புகுந்து சிவம்அகம் ஆக்குமே.

9

1772
சத்தி சிவன்தன் விளையாட்டுத்
தாரணி
சத்தி சிவமுமாம் சிவன்சத் தியுமாகும்
சத்தி சிவமன்றித் தாபரம் வேறில்லை
சத்திதான் என்றும் சமைந்துரு
வாகுமே. 10

7. சிவலிங்கம் ( சிவகுரு )

1773
குரைக்கின்ற வாரிக் குவலய நீரும்
பரக்கின்ற காற்றுப் பயில்கின்ற தீயும்
நிரைக்கின்ற வாறிவை நீண்டகன்
றானை
வரைத்து வலம்செயு மாறுஅறி

யேனே. 1

1774
வரைத்து வலஞ்செய்யு
மாறுஇங்குஒன்று உண்டு
நிரைத்து வருகங்கை நீர்மலர் ஏந்தி
உரைத்து அவன் நாமம் உணரவல்
லார்க்குப்
புரைத்துஎங்கும் போகான் புரிசடை
யோனே. 2

1775
ஒன்றெனக் கண்டோ ம் ஈசன்
ஒருவனை
நன்றென்று அடியிணை
நான்அவனைத்தொழ
வென்றுஐம் புலமும் மிகக்கிடந்து
இன்புற

அன்றுஎன்று அருள்செய்யும் ஆதிப்
பிரானே. 3

1776
மலர்ந்த அயன்மால் உருத்திரன்
மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரும் சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே. 4

1777
மேவி எழுகின்ற செஞ்சுடர்
ஊடுசென்று
ஆவி எழும்அள வன்றே உடலுற
மேவப் படுவதும் விட்டு நிகழ்வதும்
பாவித்து அடக்கிற் பரகதி தானே. 5

## 8. சம்பிரதாயம் ( பண்டை முறை )

1778
உடல்பொருள் ஆவி உதகத்தாற்
கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக்கை
வைத்து
நொடியின் அடிவைத்து நுண்ணுணர்
வாக்கி
கடியப் பிறப்பறக் காட்டினன்
நந்தியே. 1

1779
உயிரும் சரீரமும் ஒண்பொரு ளான
வியவார் பரமும்பின் மேவும்
பிராணன்
செயலார் சிவமும் சிற்சத்தி ஆதிக்கே
உயலார் குருபரன் உய்யக்
கொண்டானே. 2

1780
பச்சிம திக்கலே வைத்தஆ சாரியன்
நிச்சலும் என்னை நினையென்ற
அப்பொருள்
உச்சிக்கும் கீழது உள்நாக்கு மேலது
வைச்ச பதமிது வாய்திற வாதே. 3

1781
பிட்டடித்து எங்கும் பிதற்றித்
திரிவோனை
ஒட்டடித்து உள்ளமர் மாசெலாம்
வாங்கித்
தட்டொக்க மாறினன் தன்னையும்
என்னையும்
வட்டமது ஒத்தது வாணிபம்
வாய்த்ததே. 4

1782
தரிக்கின்ற பல்லுயிர்க்கு எல்லாம்
தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும்
உணரார்
பிரிக்கின்ற விந்து பிணக்கறுத்து
எல்லாம்
கருக்கொண்ட ஈசனைக்
கண்டுகொண்டேனே. 5

1783
கூடும் உடல்பொருள் ஆவி
குறிக்கொண்டு
நாடி அடிவைத்து அருள்ஞான
சத்தியால்
பாடல் உடலினில் பற்றற நீக்கியே
கூடிய தானவ னாம்குளிக் கொண்டே.
6

1784
கொண்டான் அடியேன் அடிமை குறிக்கொள்ளக்
கொண்டான் உயிர்பொருள் காயக் குழாத்தினைக்
கொண்டான் பலமுற்றும் தந்தவன் கோடலால்
கொண்டான் எனஒன்றும் கூறகி லானே. 7

1785
குறிக்கின்ற தேகமும் தேகியும் கூடி
நெறிக்கும் பிராணன் நிலைபெற்ற சீவன்
பறிக்கின்ற காயத்தைப் பற்றியநேர்மை
பிறக்க அறியாதார் பேயுடன்

ஒப்பரே. 8

1786
உணர்வுடை யார்கட்கு உலகமும்
தோன்றும்
உணர்வுடை யார்கட்கு உறுதுயர்
இல்லை
உணர்வுடை யார்கள் உணர்ந்தஅக்
காலம்
உணர்வுடை யார்கண் உணர்ந்துகண்
டாரே. 9

1787
காயப் பரப்பில் அலைந்து துரியத்துச்
சால விரிந்து குவிந்து சகலத்தில்
ஆயஅவ் ஆறாறு அடைந்து
திரிந்தோர்க்குத்
தூய அருள்தந்த நந்திக்கு என்

சொல்வதே. 10

1788
நானென நீயென வேறில்லை
நண்ணுதல்
ஊனென ஊனுயிர் என்ன உடனின்று
வானென வானவர் நின்று மனிதர்கள்
தேனென இன்பம் திளைக்கின்ற
வாறே. 11

1789
அவனும் அவனும் அவனை
அறியார்
அவனை அறியில் அறிவானும்
இல்லை
அவனும் அவனும் அவனை
அறியில்
அவனும் அவனும் அவனிவன்

ஆமே. 12

1790
நானிது தானென நின்றவன் நாடோறும்
ஊனிது தானுயிர் போலுணர் வானுளன்
வானிரு மாமுகில் போற்பொழி வானுளன்
நானிது அம்பர நாதனும் ஆமே. 13

1791
பெருந்தன்மை தானென யானென வேறாய்
இருந்ததும் இல்லைஅது ஈசன் அறியும்
பொருந்தும் உடல்உயிர் போல்உமை மெய்யே

திருந்தமுன் செய்கின்ற தேவர்
பிரானே. 14

## 9. திருவருள் வைப்பு

1792
இருபத மாவது இரவும் பகலும்
உருவது ஆவது உயிரும் உடலும்
அருளது ஆவது அறமும் தவமும்
பொருவது உள்நின்ற போகமது
ஆமே. 1

1793
காண்டற்கு அரியன் கருத்திலன்
நந்தியும்
தீண்டற்கும் சார்தற்கும் சேயனாத்
தோன்றிடும்
வேண்டிக் கிடந்து விளக்கொளி

யான்நெஞ்சம்
ஈண்டிக் கிடந்தங்கு இருளறும் ஆமே.
2

1794
குறிப்பினின் உள்ளே குவலயம்
தோன்றும்
வெறுப்பிருள் நீங்கில் விகிர்தனும்
நிற்கும்
செறிப்புறு சிந்தையைச் சிக்கென
நாடில்
அறிப்புறு காட்சி அமரரும் ஆமே. 3

1795
தேர்ந்தறி யாமையின் சென்றன
காலங்கள்
பேர்ந்தறி வான் எங்கள் பிஞ்ஞகன்
எம்இறை

ஆர்ந்தறி வார்அறி வேதுணை
யாமெனச்
சார்ந்தறி வான்பெருந் தன்மைவல்
லானே. 4

1796
தானே அறியும் வினைகள்
அழிந்தபின்
நானே அறிகிலன் நந்தி
அறியுங்கொல்
ஊனே உருகி உணர்வை
உணர்ந்தபின்
தேனே யனையன் நம் தேவர்
பிரானே. 5

1797
நான் அறிந்து அன்றே இருக்கின்றது
ஈசனை

வான்அறிந் தார் அறி யாது
மயங்கினர்
ஊன்அறிந்து உள்ளே உயிர்க்கின்ற
ஒண்சுடர்
தான்அறி யான்பின்னை யார்அறி
வாரே? 6

1798
அருள்எங்கு மான அளவை அறியார்
அருளை நுகர்அமு தானதும் தேரார்
அருள்ஐங் கருமத்து அதிசூக்கம்
உன்னார்
அருள்எங்கும் கண்ணானது ஆர்அறி
வாரே. 7

1799
அறிவில் அணுக அறிவது நல்கிப்
பொறிவழி யாசை புகுத்திப்

புணர்ந்திட்டு
அறிவது ஆக்கி அடியருள் நல்கும்
செறிவொடு நின்றார் சிவம்ஆயி
னாரே. 8

1800
அருளில் பிறந்திட்டு அருளில்
வளர்ந்திட்டு
அருளில் அழிந்துஇளைப் பாறி
மறைந்திட்டு
அருளான ஆனந்தத்து ஆரமுது
ஊட்டி
அருளால் என்நந்தி அகம்புகுந்
தானே. 9

1801
அருளால் அமுதப் பெருங்கடல்
ஆட்டி

அருளால் அடிபுணைந்து ஆர்வமும் தந்திட்டு
அருளானஆனந்தந்து ஆரமுது ஊட்டி
அருளால் என்நந்தி அதும்புகுந் தானே. 10

1802
பாசத்தில் இட்டது அருள்அந்தப் பாசத்தின்
நேசத்தை விட்டது அருள்அந்தநேசத்தில்
கூசற்ற முத்தி அருள்அந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்றா நிலையரு ளாமே. 11

1803

பிறவா நெறிதந்த பேரரு ளாளன்
மறவா அருள் தந்த மாதவன் நந்தி
அறவாழி அந்தணன் ஆதிப்பராபரன்
உறவாகி வந்துஎன் உளம்புகுந்
தானே. 12

1804
அகம்புகுந் தான்அடி யேற்குஅரு
ளாலே
அகம்புகுந் தும்தெரி யான்அருள்
இல்லோர்க்கு
அகம்புகுந்து ஆனந்த மாக்கிச்
சிவமாய்
அகம்புகுந் தான்நந்தி ஆனந்தி
யாமே. 13

1805
ஆயும் அறிவோடு அறியாத

மாமாயை
ஆய கரணம் படைக்கும் ஐம்பூதமும்
ஆய பலஇந் திரியம் அவற்றுடன்
ஆய அருள்ஐந்து மாம் அருட்
செய்கையே. 14

1806
அருளே சகலமும் ஆய பவுதிகம்
அருளே சராசர மாய அமலமே
இருளே வெளியே யெனும்எங்கும் ஈசன்
அருளே சகளத்தின் அன்றிஇன்
றாமே. 15

1807
சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து
தவமான ஐம்முகன் ஈசன் அரனும்
பவமுறும் மாலும் பதுமத்தோன் ஈறா

நவம்அவை யாகி நடிப்பவன் தானே. 16

1808
அருட்கண்இ லாதார்க்கு
அரும்பொருள் தோன்றா
அருட்கண்உ ளோர்க்குஎதிர்
தோன்றும் அரனே
இருட்கண்ணி னோர்க்குஅங்கு
இரவியும் தோன்றாத்
தெருட்கண்ணி னோர்க்குஎங்கும்
சீரொளி யாமே. 17

1809
தானே படைத்திடும் தானே
அளித்திடும்
தானே துடைத்திடும் தானே
மறைத்திடும்

தானே இவைசெய்து தான்முத்தி
தந்திடும்
தானே வியாபித் தலைவனும் ஆமே.
18

1810

தலையான நான்கும் தனதுஅரு
வாகும்
அலையா அருவுரு வாகும் சதாசிவம்
நிலையான கீழ்நான்கு நீடுரு வாகும்
துலையா இறைமுற்று மாய் அல்லது
ஒன்றே. 19

1811

ஒன்றது வாலே உலப்பிலி தானாகி
நின்றது தான்போல் உயிர்க்குயி
ராய்நிலை
துன்றி அவைஅல்ல வாகும்

துணையென்ன
நின்றது தான்விளை யாட்டென்னுள்
நேயமே. 20

1812
நேயத்தே நின்றிடும் நின்மலன்
சத்தியோடு
ஆயக் குடிலைகள் நாதம்
அடைந்திட்டுப்
போயக் கலைபல வாகப்
புணர்ந்திட்டு
வீயத் தகாவிந்து வாக விளையுமே.
21

1813
விளையும் பரவிந்து தானே வியாபி
விளையும் தனிமாயை மிக்கமா
மாயை

கிளையொன்று தேவர் கிளர்மனு
வேதம்
அளவொன் றிலாஅண்ட கோடிக
ளாமே. 22

## 10. அருள் ஒளி

1814
அருளில் தலைநின்று அறிந்துஅழுந்
தாதார்
அருளில் தலைநில்லார் ஐம்பாசம்
நீங்கார்
அருளின் பெருமை அறியார்
செறியார்
அருளில் பிறந்திட்டு அறிந்துஅறி
வாரே. 1

1815

வாரா வழிதந்த மாநந்தி பேர்நந்தி
ஆரா அமுதளித்து ஆனந்தி பேர்நந்தி
பேரா யிரமுடைப் பெம்மான்பேர்
ஒன்றினில்
ஆரா அருட்கடல் ஆடுகென் றானே.
2

1816

ஆடியும் பாடியும் அழுதும்
அரற்றியும்
தேடியும் கண்டேன் சிவன்பெரும்
தன்மையைக்
கூடிய வாறே குறியாக் குறிதந்தென்
ஊடுநின் றான்அவன் தன்னருள்
உற்றே. 3

1817

உற்ற பிறப்பும் உறுமலம் ஆனதும்
பற்றிய மாயாப் படலம் எனப்
பண்ணி
அத்தனை நீயென்று அடிவைத்தேன்
பேர்நந்தி
கற்றன விட்டேன் கழல்பணிந்
தேனே. 4

1818
விளக்கினை யேற்றி வெளியை
அறிமின்
விளக்கினை முன்னே வேதனை
மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை
யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர்
தாமே. 5

1819
ஒளியும் இருளும் ஒருகாலும் தீரா
ஒளியு ளோர்க்குஅன்றோ ஒழியாது
ஒளியும்
ஒளியுருள் கண்டகண் போலவே
றாயுள
ஒளியிருள் நீங்க உயிர்சிவம் ஆமே.
6

1820
புறமே திரிந்தேனைப் பொற்கழல்
சூட்டி
நிறமே புகுந்தென்னை நின்மலன்
ஆக்கி
அறமே புகுந்தெனக்கு ஆரமுது ஈந்த
திறம்ஏதென்று எண்ணித் திகைத்திருந்
தேனே. 7

1821
அருளது என்ற அகலிடம் ஒன்றும்
பொருளது என்ற புகலிடம் ஒன்றும்
மருளது நீங்க மனம்புகுந் தானைத்
தெருளுறும் பின்னைச் சிவகதி
தாமே. 8

1822
கூறுமின் நீர்முன் பிறந்திங்கு
இறந்தமை
வேறொரு தெய்வத்தின்
மெய்ப்பொருள் நீக்கிடும்
பாறணி யும்உடல் வீழலிட்டு
ஆருயிர்
தேறுஅணிவோம்இது செப்பவல்
லீரே. 9

## 11. சிவபூசை

1823
உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு
ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ
புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன்
சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளா
மணிவிளக்கே. 1

1824
வேட்டவி யுண்ணும் விரிசடை
நந்திக்குக்
காட்டவும் நாம்இலம் காலையும்
மாலையும்
ஊட்டவி யாவன உள்ளம்
குளிர்விக்கும்

பாட்டவி காட்டுதும் பால்அவி
யாமே. 2

1825
பான்மொழி பாகன் பராபரன்
தானாகும்
ஆன சதாசிவன் தன்னைஆ வாகித்து
மேன்முகம் ஈசான மாகவே
கைக்கொண்டு
சீன்முகம் செய்யச் சிவனவன்
ஆகுமே. 3

1826
நினைவதும் வாய்மை மொழிவதும்
அல்லால்
கனைகழல் ஈசனைக் காண அரிதாம்
கனைகழல் ஈசனைக் காண்குற
வல்லார்

புனைமலர் நீர்கொண்டு போற்றவல்
லாரே. 4

1827
மஞ்சன மாலை நிலாவிய வானவர்
நெஞ்சினுள் ஈசன் நிலைபெறு
காரணம்
அஞ்சமு தாம்உப சாரம்எட்டு
எட்டோ டும்
அஞ்சலி யோடும் கலந்துஅர்ச்சித்
தார்களே. 5

1828
புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு
நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரி
யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்இறை

ஈசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே. 6

1829
அத்தன் நவதீர்த்தம் ஆடும் பரிசுகேள்
ஒத்தமெய்ஞ் ஞானத்து உயர்ந்தார் பதத்தைச்
சுத்தம தாக விளக்கித் தெளிக்கவே
முத்தியாம் என்று நம்மூலன் மொழிந்ததே. 7

1830
மறப்புற்று இவ்வழி மன்னிநின் றாலும்
சிறப்பொடு பூநீர் திருந்தமுன் ஏந்தி
மறப்பின்றி யுன்னை வழிபடும் வண்ணம்
அறப்பெற வேண்டும் அமரர்

பிரானே. 8

1831
ஆரா தனையும் அமரர் குழாங்களும்
தீராக் கடலும் நிலத்துஉம
தாய்நிற்கும்
பேரா யிரமும் பிரான்திரு நாமமும்
ஆரா வழியெங்கள் ஆதிப் பிரானே.
9

1832
ஆன்ஐந்தும் ஆட்டி அமரர்
கணம்தொழத்
தான்அந்த மில்லாத் தலைவன்
அருளது
தேன்உந்து மாமலர் உள்ளே
தெளிந்ததோர்
பார்ஐங் குணமும் படைத்துநின்

றானே. 10

1833
உழைக்கொண்ட பூநீர் ஒருங்குடன் ஏந்தி
மழைக்கொண்ட மாமுகில் மேற்சென்று வானோர்
தழைக்கொண்ட பாசம் தயங்கிநின்று ஏத்தப்
பிழைப்பின்றி எம்பெரு மான்அரு ளாமே. 11

1834
வெள்ளக் கடலுள் விரிசடை நந்திக்கு
உள்ளக் கடற்புக்கு வார்சுமை பூக்கொண்டு
கள்ளக் கடல்விட்டுக்கைதொழ மாட்டாதார்

அள்ளக் கடலுள் அழுந்துகின் றாரே. 12

1835
கழிப்படுந் தண்கடற் கௌவை
யுடைத்து
வழிப்படு வார்மலர் மொட்டுஅறி
யார்கள்
பழிப்படு வார்பல ரும்பழி வீழ
வெளிப்படு வோர்உச்சி மேவிநின்
றானே. 13

1836
பயனறிவு ஒன்றுண்டு பன்மலர்
தூவிப்
பயனறி வார்க்குஅரன் தானே
பயிலும்
நயனங்கள் மூன்றுடை யான்அடி சேர

வயனங்க ளால்என்றும் வந்துநின்
றானே. 14

1837
ஏத்துவர் மாமலர் தூவித்
தொழுதுநின்று
ஆர்த்தெமது ஈசன் அருட்சே
வடியென்றன்
மூர்த்தியை மூவா முதலுறு
வாய்நின்ற
தீர்த்தனை யாரும் துதித்துஉணா ராரே.
15

1838
தேவர்க ளோடுஇசை வந்துமண்
ணோடுறும்
பூவொடு நீர்சுமந்து ஏத்திப் புனிதனை
மூவரிற் பன்மை முதல்வனாய்

நின்றருள்
நீர்மையை யாவர் நினைக்கவல்
லாரே. 16

1839
உழைக்கவல் லோர்நடு நீர்மலர்
ஏந்திப்
பிழைப்பின்றி ஈசன் பெருந்தவம்
பேணி
இழைக்கொண்ட பாதத்து இனமலர்
தூவி
மழைக்கொண்டல் போலவே
மன்னிநில் லீரே. 17

1840
வென்று விரைந்து விரைப்பணி
என்றனர்
நின்று பொருந்த இறைபணி

நேர்படத்
துன்று சலமலர் தூவித் தொழுதிடில்
கொண்டிடும் நித்தலும்
கூறியஅன்றே. 18

1841
சாத்தியும் வைத்தும் சயம்புஎன்று
ஏத்தியும்
ஏத்தியும் நாளும் இறையை
அறிகிலார்
ஆத்தி மலக்கிட்டு அகத்துஇழுக்கு
அற்றக்கான்
மாத்திக்கே செல்லும் வழியது வாமே.
19

1842
ஆவிக் கமலத்தில் அப்புறத்து
இன்புற

மேவித் திரியும் விரிசடை நந்தியைக்
கூவிக் கருதிக் கொடுபோய்ச்
சிவத்திடைத்
தாவிக்கு மந்திரம் தாமறி யாரே. 20

1843
காண்ஆகத் துள்ளேஅழுந்திய
மாணிக்கம்
காணும் அளவும் கருத்தறி வாரில்லை
பேணிப் பெருக்கிப் பெருக்கி
நினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம்புகுந் தானே.
21

1844
பெருந்தன்மை நந்தி பிணங்கிருள்
நேமி
இருந்தன்மை யாலும் என்

நெஞ்சுஇடங் கொள்ள
வருந்தன்மை யாளனை வானவர்
தேவர்
தருந்தன்மை யாளனைத் தாங்கிநின்
றாரே. 22

1845
சமைய மலசுத்தி தன்செயல்
அற்றிடும்
அமையும் விசேடமும் ஆனமந்
திரசுத்தி
சமையநிர் வாணம் கலாசுத்தி யாகும்
அமைமன்று ஞானம் ஆனார்க்கு
அபிடேகமே. 23

1846
ஊழிதோ றூழி உணர்ந்தவர்க்கு
அல்லது

ஊழில் உயிரை உணரவும்
தான்ஒட்டா
ஆழி அமரும் அரிஅயன்
என்றுளோர்
ஊழி கடந்தும் ஓர்உச்சியு ளானே. 24

## 12. குருபூசை

1847
ஆகின்ற நந்தி அடித்தா மரைபற்றிப்
போகின்றுபதேசம் பூசிக்கும்
பூசையும்
ஆகின்ற ஆதாரம் ஆறாறு
அதனின்மேல்
போகின்ற பொற்பையும் போற்றுவன்
யானே. 1

1848

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமலர் இட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க்கு
அல்லது
தேனமர் புங்குழல் சேரஒண் ணாதே.
2

1849
மேவிய ஞானத்தின் மிக்கிடின்
மெய்ப்பரன்
ஆவயின் ஞான நெறிநிற்றல்
அர்ச்சனை
ஓவற உட்பூ சனைசெய்யில் உத்தமம்
சேவடி சேரல் செயலறல் தானே. 3

1850
உச்சியும் காலையும் மாலையும்
ஈசனை

நச்சுமின் நச்சி நமவென்று நாமத்தை
விச்சிமின் விச்சு விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் பேர்நந்தி நாயகன் ஆகுமே.
4

1851
புண்ணிய மண்டலம் பூசைநா
றாகுமாம்
பண்ணிய மேனியும் பத்துநூ
றாகுமாம்
எண்ணிலிக்கு ஐயம் இடில்கோடி
யாகுமால்
பண்ணிடில் ஞானிஊண் பார்க்கில்
விசேடமே. 5

1852
இந்துவும் பானுவும் இலங்கும்
தலத்திடை

வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு
வாரியாம்
இந்துவும் பானுவும் இலங்காத்
தலத்திடை
வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே.
6

1853
இந்துவும் பானுவும் என்றெழு
கின்றதோர்
விந்துவும் நாதமும் ஆகிமீ தானத்தே
சிந்தனை சாக்கிரா தீதத்தே
சென்றிட்டு
நந்தியைப் பூசிக்க நற்பூசை யாமே. 7

1854
மனபவ னங்களை மூலத்தான் மாற்றி
அனித உடல்பூத மாக்கி அகற்றிப்

புனிதன் அருள்தனில் புக்கிருந்து
இன்பத்
தனியுறு பூசை சதாசிவற்கு ஆமே. 8

1855
பகலும் இரவும் பயில்கின்ற பூசை
இயல்புடை ஈசர்க்கு இணைமல
ராகப்
பகலும் இரவும் பயிலாத பூசை
சகலமும் தான்கொள்வன் தாழ்சடை
யோனே. 9

1856
இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்குஅற ஆனந்தத் தேறல் பருகி
இராப்பகல் அற்ற இறையடி
இன்பத்து
இராப்பகல் மாயை இரண்டுஇடத்

தேனே. 10

## 13. மகேசுவர பூசை

1857
படமாடக் கோயில் பகவற்குஒன்று
ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு
ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று
ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது
ஆமே. 1

1858
தண்டுஅறு சிந்தை தபோதனார்
தாம்மகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது

கொண்டது மூன்று புவனமும்
கொண்டதுஎன்று
எண்திசை நந்தி எடுத்துரைத் தானே.
2

1859
மாத்திரை ஒன்றினில் மன்னி
அமர்ந்துறை
ஆத்தனுக்கு ஈந்த அரும்பொரு
ளானது
மூர்த்திகள் மூவர்க்கும் மூவேழ்
குரவர்க்கும்
தீர்த்தம தாம்அது தேர்ந்துகொள்
வீரே. 3

1860
அகரம் ஆயிரம் அந்தணர்க்கு ஈயில்
என்

சிகரம் ஆயிரம் செய்து முடிக்கில்என்
பகரு ஞானி பகல்ஊண் பலத்துக்கு
நிகரில்லை என்பது நிச்சயம் தானே.
4

1861
ஆறிடும் வேள்வி அருமறை நூலவர்
கூறிடும் அந்தணர் கோடிபேர்
உண்பதில்
நீறிடும் தொண்டர் நினைவின்
பயனிலை
பேறெனில் ஓர்பிடி பேறது வாகுமே.
5

1862
ஏறுடை யாய்இறை வாஎம்பி
ரான்என்று
நீறிடு வார்அடி யார்நிகழ் தேவர்கள்

ஆறணி செஞ்சடை அண்ணல்
இவர்என்று
வேறுஅணி வார்க்கு வினையில்லை
தானே. 6

1863
சீர்நந்தி கொண்டு திருமுக மாய்விட்ட
பேர்நந்தி என்னும் பிறங்கு
சடையனை
நான்நொந்து நொந்து வருமளவுஞ்
சொல்லப்
பேர்நந்தி என்னும் பிதற்குஒழி
யேனே. 7

1864
அழிதகவு இல்லா அரன்அடி யாரைத்
தொழுகை ஞாலத்துத் தூfங்கிருள்
நீங்கும்

பழுது படாவண்ணம் பண்பனை
நாடித்
தொழுதெழ வையகத்து ஓர்இன்பம்
ஆமே. 8

1865
பகவற்குஏதா கிலும் பண்பில ராகிப்
புகுமத்த ராய்நின்று பூசனை செய்யும்
முகமத்தோடு ஒத்துநின்று ஊழிதோ
றூழி
அகமத்த ராகிநின்று ஆய்ந்தொழிந்
தா ரே 9

1866
வித்தக மாகிய வேடத்தர் உண்டஊன்
அத்தன் அயன்மால் அருந்திய
வண்ணமாம்
சித்தம் தெளிந்தவர் சேடம் பருகிடின்

முத்தியாம் என்றுநம் மூலன் மொழிந்ததே. 10

1867
தாழ்விலர் பின்னும் முயல்வர் அருந்தவம்
ஆழ்வினை ஆழ அவர்க்கே அறஞ்செய்யும்
ஆழ்வினை நீக்கி அருவினை தன்னொடும்
போழ்வினை தீர்க்கும் அப் பொன்னுலகு ஆமே. 11

## 14. அடியார் பெருமை

1868
திகைக்குரி யானொரு தேவனை நாடும்

வகைக்குரி யானொரு வாது
இருக்கில்
பகைக்குரி யாரில்லைப் பார்மழை
பெய்யும்
அகக்குறை கேடில்லை அவ்வுல
குக்கே. 1

1869
அவ்வுல கத்தே பிறந்துஅவ்
உடலோணடும்
அவ்வுல கத்தே அருந்தவம் நாடுவர்
அவ்வுல கத்தே அரனடி கூடுவர்
அவ்வுல கத்தே அருள்பெறு வாரே. 2

1870
கொண்ட குறியும் குலவரை உச்சியும்
அண்டரும் அண்டத்து அமரரும்
ஆதியும்

எண்டிசை யோரும்வந்து என்கைத்
தலத்தினுள்
உண்டெனில் நாம்இனி உய்ந்தொழிந்
தோமே. 3

1871
அண்டங்கள் ஏழும் அகண்டமும்
ஆவியும்
கொண்ட சராசரம் முற்றும்
குணங்களும்
பண்டை மறையும் படைப்பளிப்பு
ஆதியும்
கண்டசிவனும்என் கண்ணன்றி
இல்லையே. 4

1872
பெண்ணல்ல ஆணல்ல பேடல்ல
மூடத்துள்

உள்நின்ற சோதி ஒருவர்க்கு
அறியொணாக்
கண்ணின்றிக் காணும் செவியின்றிக்
கேட்டிரும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது
மூப்பே. 5

1873
இயங்கும் உலகினில் ஈசன் அடியார்
மயங்கா வழிசெல்வர் வானுலகு
ஆள்வர்
புயங்களும் எண்டிசை போதுபா தாள
மயங்காப் பகிரண்ட மாமுடி தானே.
6

1874
அகம்படி கின்றநம் ஐயனை ஒரும்
அகம்படி கண்டவர் அல்லலில் சேரார்

அகம்படி உட்புக்கு அறிகின்ற
நெஞ்சம்
அகம்படி கண்டுஆம் அழிக்கலும்
எட்டே. 7

1875
கழிவும் முதலும் காதல் துணையும்
அழிவும் தாய்நின்ற ஆதிப்
பிரானைப்
பழியும் புகழும் படுபொருள் முற்றும்
ஒழியும்என் ஆவி உழவுகொண்
டானே 8

1876
என்தாயோடு என்அப்பன் ஏழ்ஏழ்
பிறவியும்
அன்றே சிவனுக்கு எழுதிய
ஆவணம்

ஒன்றாய் உலகம் படைத்தான்
எழுதினான்
நின்றான் முகில்வண்ணன் நேர்எழுத்
தாமே. 9

1877
துணிந்தார் அகம்படி துன்னி
உறையும்
பணிந்தார் அகம்படி பால்பட்டு
ஒழுகும்
அணிந்தார் அகம்படி ஆதிப்
பிரானைக்
கணிந்தார் ஒருவர்க்கு கைவிடலாமே.
10

1878
தலைமிசை வானவர் தாழ்சடை நந்தி
மிலைமிசை வைத்தனன் மெய்ப்பணி

செய்யப்
புலைமிசை நீங்கிய பொன்னுலகு
ஆளும்
பலமிசை செய்யும் படர்சடை
யோனே. 11

1879
அறியாப் பருவத்து அரன்அடி
யாரைக்
குறியால் அறிந்தின்பம் கொண்டது
அடிமை
குறியார் சடைமுடி கட்டி நடப்பார்
மறியார் புனல்மூழ்க மாதவம் ஆமே.
12

1880
அவன்பால் அணுகியே அன்புசெய்
வார்கள்

சிவன்பால் அணுகுதல் செய்யவும் வல்லன்
அவன்பால் அணுகியே நாடும் அடியார்
இவன்பால் பெருமை இலயமது ஆமே. 13

1881
முன்னிருந் தார்முழுது எண்கணத் தேவர்கள்
எண்ணிறந்து அன்பால் வருவர் இருநிலத்து
எண்இரு நாலு திசைஅந் தரம் ஒக்கப்
பன்னிரு காதம் பதஞ்செய்யும் பாரே. 14

1882
சிவயோகி ஞானி செறிந்தஅத் தேசம்

அவயோகம் இன்றி அறிவோர்
உண்டாகும்
நவயோகம் கைகூடும் நல்லியல்
காணும்
பவயோகம் இன்றிப் பரலோகம்
ஆமே. 15

1883
மேலுணர் வான்மிகு ஞாலம்
படைத்தவன்
மேலுணர் வான்மிகு ஞாலம்
கடந்தவன்
மேலுணர் வார்மிகு ஞாலத்து
அமரர்கள்
மேலுணுர் வார்சிவன் மெய்யடி
யார்களே. 16

## 15. போசன விதி

1884
எட்டுத் திசையும் இறைவன் அடியவர்க்கு
கட்ட அடிசில் அமுதென்று எதிர்கொள்வர்
ஒட்டி ஒருநிலம் ஆள்பவர் அந்நிலம்
விட்டுக் கிடக்கில் விருப்பறி யாரே. 1

1885
அச்சிவன் உள்நின்ற அருளை அறிந்தவர்
உச்சியம் போதாக உள்ளமர் கோவிற்குப்
பிச்சை பிடித்துண்டு பேதம் அறநினைந்து
இச்சைவிட்டு ஏகாந்தத்து ஏறி இருப்பரே. 2

## 16. பிட்சா விதி

1886
விச்சுக் கலம் உண்டு வேலிச்செய்
ஒன்றுண்டு
உச்சிக்கு முன்னே உழவு சமைந்தது
அச்சம்கெட்டு அச்செயல்
அறுத்துண்ண மாட்டாதார்
இச்சைக்குப் பிச்சை இரக்கின்ற
வாறே. 1

1887
பிச்சையது ஏற்றான் பிரமன்
தலைதன்னில்
பிச்சையது ஏற்றான் பிரியா
அறஞ்செய்யப்
பிச்சையது ஏற்றான் பிரமன்

சிரங்காட்டிப்
பிச்சையது ஏற்றான் பிரமன்
பரமாகவே. 2

1888
பரந்துலகு ஏழும் படைத்த பிரானை
இரந்துணி என்பர்கள் எற்றுக்கு
இரக்கும்
நிரந்தக மாக நினையும் அடியார்
இரந்துண்டு தன்கழல் எட்டச்செய்
தானே. 3

1889
வரஇருந் தான்வழி நின்றிடும் ஈசன்
தரஇருந் தான்தன்னை நல்லவர்க்கு
இன்பம்
பொரஇருந் தான்புக லேபுக லாக
வரஇருந் தால்அறி யான்என்ப

தாமே. 4

1890
அங்கார் பசியும் அவாவும் வெகுளியும்
தங்கார் சிவனடி யார்சரீரத்திடைப்
பொங்கார் புவனத்தும் புண்ணிய லோகத்தும்
தங்கார் சிவனைத் தலைப்படு வாரே. 5

1891
மெய்யக ஞானம் மிகத்தெளிந் தார்களும்
கையதும் நீண்டார் கடைத்தலைக் கேசெல்வர்
ஐயம் புகாமல் இருந்த தவசியார்
வையகம் எல்லாம் வரஇருந்தாரே. 6

## 17. முத்திரை பேதம்

நாலேழு மாறவே நண்ணிய
முத்திரை
பாலான மோன மொழியில்
பதிவித்து
மேலான நந்தி திருவடி மீதுய்யக்
கோலா கலங்கெட்டுக் கூடுநன்
முத்தியே. 1

1893
துரியங்கள் மூன்று சொருகுஇட னாகி
அரிய உரைத்தாரம் அங்கே அடக்கி
மருவிய சாம்பவி கேசரி உண்மை
பெருகிய ஞானம் பிறழ்முத்
திரையே. 2

1894
சாம்பவி நந்தி தன்னருள்
பார்வையாம்
ஆம்பவம் இல்லா அருட்பாணி
முத்திரை
ஓம்பயில் ஓங்கிய உண்மைய கேசரி
நாம்பயில் நாதன்மெய்ஞ் ஞானமுத்
திரையே. 3

1895
தானத்தின் உள்ளே சதாசிவன்
ஆயிடும்
ஞானத்தின் உள்ளே நற்சிவம்
ஆதலால்
ஏனைச் சிவமாம் சொரூபம்
மறைந்திட்ட
மோனத்து முத்திரை முத்தாந்த
முத்தியே. 4

1896
வாக்கு மனமும் இரண்டும்
மவுனமாம்
வாக்கு மவுனத்து வந்தாலும்
மூங்கையாம்
வாக்கு மனமும் மவுனமாம் சுத்தரே
ஆக்கும் அச் சுத்த்ததை யார்அறி
வார்களே. 5

1897
யோகத்தின் முத்திரை ஓர்அட்ட
சித்தியாம்
ஏகத்த ஞானத்து முத்திரை
எண்ணுங்கால்
ஆகத் தகும்வேத கேசரி சாம்பவி
யோகத்துக் கேசரி யோகமுத்
திரையே. 6

1898
யோகிஎண் சித்தி அருளொலி
வாதனை
போகி தன் புத்தி புருடார்த்த
நன்னெறி
ஆகும்நன் சத்தியும் ஆதார சோதனை
ஏகமும் கண்டொன்றில் எய்திநின்
றானே. 7

1899
துவாதச மார்க்கமென் கோடச
மார்க்கமாம்
அவாஅறும் ஈர்ஐ வகைஅங்கம்
ஆறும்
தவாஅறு வேதாந்த சித்தாந்தத்
தன்மை
நவாஅக மோடுஉன்னல் நற்சுத்த

சைவமே. 8

1900
மோனத்து முத்திரை முத்தர்க்கு
முத்திரை
ஞானத்து முத்திரை நாதர்க்கு
முத்திரை
தேனிக்கும் முத்திரை சித்தாந்த
முத்திரை
கானிக்கும் முத்திரை கண்ட சமயமே.
9

1901
தூநெறி கண்ட சுவடு நடுவுஎழும்
பூநெறி கண்டுஅது பொன்னக
மாய்நிற்கும்
மேல்நெறி கண்டது வெண்மதி
மேதினி

நீல்நெறி கண்டுள நின்மலன் ஆமே. 10

## 18. பூரணக் குகை நெறிச் சமாதி

1902
வளர்பிறை யில்தேவர் தம்பாலின் முன்னி
உளரொளி பானுவின் உள்ளே ஒடுங்கித்
தளர்வில் பிதிர்பதம் தங்கிச் சசியுள்
உளதுறும் யோகி உடல்விட்டால் தானே. 1

1903
தான்இவை ஒக்கும் சமாதிaக கூடாது
போன வியோகி புகலிடம் போந்துபின்

ஆனவை தீர நிரந்தர மாயோகம்
ஆனவை சேர்வார் அருளின் சார்
வாகியே. 2

1904
தான்இவ் வகையே புவியோர்
நெறிதங்கி
ஆன சிவயோகத்து ஆமாறுஆம்
அவ்விந்து
தானதில் அந்தச் சிவயோகி ஆகுமுன்
ஊனத்தோர் சித்திவந்து ஓர்காயம்
ஆகுமே. 3

1905
சிவயோகி ஞானி சிதைந்துடல்
விட்டால்
தவலோகம் சேர்ந்துபின் தான்வந்து
கூடிச்

சிவயோக ஞானத்தால் சேர்ந்தவர்
நிற்பர்
புவலோகம் போற்றும்நற்
புண்ணியத்தோரே. 4

1906
ஊனமில் ஞானிநல் யோகி
உடல்விட்டால்
தானற மோனச் சமாதியுள் தங்கியே
தானவன் ஆகும் பரகாயம் சாராதே
ஊனமில் முத்தராய் மீளார்
உணர்வுற்றே. 5

1907
செத்தார் பெறும் பயன் ஆவது
ஏதெனில்
செத்துநீர் சேர்வது சித்தினைக்
கூடிடில்

செத்தார் இருந்தார் செகத்தில்
திரிமலம்
செத்தார் சிவமாகி யேசித்தர் தாமே. 6

1908
உன்னக் கருவிட்டு உரவோன்
அரன்அருள்
பன்னப் பரமே அருட்குலம்
பாலிப்பன்
என்னப் புதல்வர்க்கும் வேண்டி
யிடுஞானி
தன்இச்சைக்கு ஈசன் உருச்செய்யும்
தானே. 7

1909
எங்கும் சிவமாய் அருளாம்
இதயத்துத்
தங்கும் சிவஞானிக்கு எங்குமாம்

தற்பரம்
அங்காங்கு எனநின்று சகமுண்ட வான்தோய்தல்
இங்கே இறந்துஎங்கு மாய்நிற்கும் ஈசனே. 8

## 19. சமாதிக் கிரியை

1910
அந்தமில் ஞானிதன் ஆகம் தீயினில்
வெந்திடின் நாடெலாம் வெப்புத் தீயினில்
நொந்து நாய்நரி நுகரின் நுண்செரு
வந்துநாய் நரிக்கு உணவாகும் வையகமே. 1

1911
எண்ணிலா ஞானி உடல்எரி தாவிடில்

அண்ணல்தம் கோயில் அழல்இட்டது
ஆங்கு ஒக்கும்
மண்ணில் மழைவிழா வையகம்
பஞ்சமாம்
எண்ணரு மன்னர் இழப்பார் அரசே.
2

1912
புண்ணிய மாம்அவர் தம்மைப்
புதைப்பது
நண்ணி அனல்கோக்கில் நாட்டில்
அழிவாகும்
மண்ணில் அழியில் அலங்கார
பங்கமாம்
மண்ணுலகு எல்லாம் மயங்கும்
அனல்மண்டியே. 3

1913

அந்தமில் ஞானி அருளை
அடைந்தக்கால்
அந்த உடல்தான் குகைசெய்து
இருந்திடில்
சுந்தர மன்னரும் தொல்புவி
உள்ளோரும்
அந்தமில் இன்ப அருள்பெறு வாரே.
4

1914
நவமிகு சாணாலே நல்லாழம் செய்து
குவைமிகு சூழஐஞ் சாணாகக்
கோட்டித்
தவமிகு குகைமுக் கோணமுச்
சாணாக்கிப்
பவமறு நற்குகை பத்மா சனமே. 5

1915

தன்மனை சாலை குளங்கரை
ஆற்றிடை
நன்மலர்ச் சோலை நகரின்நற் பூமி
உன்னரும் கானம் உயர்ந்த
மலைச்சாரல்
இந்நிலம் தான்குகைக்கு எய்தும்
இடங்களே. 6

1916

நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க
பாதமாய்
நிற்கின்ற பாதம் நவபாதம் நேர்விழப்
பொற்பமா ஓசமும் மூன்றுக்கு
மூன்றுஅணி
நிற்பவர் தாம் செய்யும் நேர்மைய
தாமே. 7

1917

பஞ்ச லோகங்கள் நவமணி பாரித்து
விஞ்சப் படுத்துஅதன் மேல்ஆ
சனம்இட்டு
முஞ்சிப் படுத்துவெண் ணீறு இட்ட
தன்மேலே
பொன்செய் நற்சுண்ணம்
பொதியலும் ஆமே. 8

1918
நள்குகை நால்வட்டம் படுத்துஅதன்
மேல்சாரக்
கள்ளவிழ தாமம் களபம்கத் தூரியும்
தெள்ளிய சாந்து புழுகுபன்
னீர்சேர்த்து
ஒள்ளிய தூபம் உவந்திடு வீரே. 9

1919
ஓதிடும் வெண்ணீற்றால் உத்தூளம்

குப்பாயம்
மீதினில் இட்டுஆ சனத்தினின் மேல்
வைத்துப்
போதறு கண்ணமும் நறும்
பொலிவித்து
மீதில் இருத்தி விரித்திடு வீரே. 10

1920
விரித்தபின் நாற்சாரும் மேவுதல்
செய்து
பொரித்த கறிபோ னகம் இள நீரும்
குருத்தலம் வைத்துஓர் குழைமுகம்
பார்வை
தரித்தபின் மேல்வட்டம் சாத்திடு
வீரே. 11

1921
மீது சொரிந்திடும் வெண்ணீறும்

கண்ணமும்
போது பலகொண்டு தர்ப்பைப்புல் வில்வமும்
பாத உதகத்தான் மஞ்சனம் செய்துபார்
மீதுமுன் றுக்குமூன்று அணிநிலம் செய்யுமே. 12

1922
ஆதன மீதில் அரசு சிவலிங்கம்
போதும் இரண்டினில் ஒன்றைத் தாபித்து
மேதரு சந்நிதி மேவுத் தரம்பூர்வம்
காதலில் சோடசம் காண்உப சாரமே. 13

## 20. விந்துற்பனம்

1923

உதயத்தில் விந்துவில் ஓங்குகுண்
டலியும்
உதயக் குடிலில் வயிந்தவம் ஒன்பான்
விதியில் பிரமாதி கள்மிகு சத்தி
கதியில் கரணம் கலைவை கரியே. 1

1924

செய்திடும் விந்துபே தத்திறன் ஐ
ஐந்தும்
செய்திடும் நாதபேதத்திற னால்
ஆறும்
செய்திடும் மற்றவை
ஈர்இரண்டில்திறம்
செய்திடும் ஆறுஆறு சேர்தத்
துவங்களே. 2

1925

வந்திடு பேத மெலாம்பர விந்துமேல்
தந்திடு மாமாயை வாகேசி தற்பரை
உந்து குடிலையோடு ஏமுறு குண்டலி
விந்துவில் இந்நான்கும் மேவா
விளங்குமே. 3

1926

விளங்கு நிவர்த்தாதி மேலக ராதி
வளங்கொள் உகாரம் மகாரத்
துள்விந்து
களங்கமில் நாதாந்தம் கண்ணினுள்
நண்ணி
உளங்கொள் மனாதியுள் அந்தமும்
ஆமே. 4

1927

அந்தமும் ஆதியும் ஆகிப் பராபரன்
வந்த வியாபி எனலாய அந்நெறி

கந்தம தாகிய காரண காரியம்
தந்துஐங் கருமமும் தான்செய்யும்
வீயமே. 5

1928
வீயம தாகிய விந்துவின் சத்தியால்
ஆய அகண்டமும் அண்டமும்
பாரிப்பக்
காயஜம் பூதமும் காரிய மாயையில்
ஆயிட விந்து அகம்புறம் ஆகுமே. 6

1929
புறம்அகம் எங்கும் புகுந்துஒளிர்
விந்து
நிறமது வெண்மை நிகழ்நாதம்
செம்மை
உறமகிழ் சத்தி சிவபாதம் ஆயுள்
திறனொடு வீடுஅளிக் கும்செயல்

கொண்டே. 7

1930
கொண்டஇவ் விந்து பரமம்போல்
கோதற
நின்ற படம்கட மாய்நிலை நிற்றலின்
கண்டக லாதியின் காரண காரியத்து
அண்டம் அனைத்துமாய் மாமாயை
ஆகுமே. 8

1931
அதுவித்தி லேநின்று அங்கு
அண்ணிக்கும் நந்தி
இதுவித்தி லேஉள வாற்றை உணரார்
மதுவித்தி லேமலர் அன்னம தாகிப்
பொதுவித்திலே நின்ற புண்ணியன்
தானே. 9

1932
வித்தினில் அன்றி முளையில்லை
அம்முளை
வித்தினில் அன்றி வெளிப்படு
மாறில்லை
வித்தும் முளையும் உடனன்றி
வேறில்லை
அத்தன்மை யாரும் அரன்நெறி
காணுமே. 10

1933
அருந்திய அன்னம் அவைமூன்று
கூறாம்
பொருந்தும் உடல்மனம் போம்மலம்
என்னத்
திருந்தும் உடன்மன மாம் கூறு
சேர்ந்திட்டு
இருந்தன முன்னாள் இரதமது

ஆகுமே. 11

1934
இரதம் முதலான ஏழ்தாது மூன்றில்
உரிய தினத்தில் ஒருபுல் பனிபோல்
அரிய துளிவிந்து வாகும்ஏழ்
மூன்றின்
மருவிய விந்து வளரும்கா யத்திலே.
12

1935
காயத்தி லேமூன்று நாளில்
கலந்திட்டுக்
காயத்துள் தன்மனம் ஆகும்
கலாவிந்து
நேயத்தே நின்றோர்க்கு நீங்கா
விடாமையின்
மாயத்தே செல்வோர் மனத்தோடு

அழியுமே. 13

1936
அழிகின்ற விந்து அளவை அறியார்
கழிகின்ற தன்னையுட் காக்கலும்
தேரார்

அழிகின்ற காயத்து அழிந்துஅயர்
உற்றோர்
அழிகின்ற தன்மை அறிந்தொழி
யாரே. 14

21. விந்து ஜயம் - போக
சரவோட்டம்

1937
பார்க்கின்ற மாதரைப் பாராது
அகன்றுபோய்

ஓர்க்கின்ற உள்ளம் உருக
அழல்மூட்டிப்
பார்க்கின்ற கண்ணாசை பாழ்பட
மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே.
1

1938
தானே அருளால் சிவயோகம்
தங்காது
தானேஅக் காமாதி தங்குவோ னும்
உட்கும்
தானே அதிகாரம் தங்கில்
சடங்கெடும்
ஊனே அவற்றுள் உயிர்ஓம்பா
மாயுமே. 2

1939

மாயாள் வசத்தே சென்றிவர்
வேண்டில்
ஒயா இருபக்கத்து உள்வளர்
பக்கத்துள்
ஏயாஎண் நாள்இன்ப மேல்பனி
மூன்றிரண்டு
ஆயா அபரத்துள் ஆதிநாள்
ஆறாமே. 3

1940

ஆறுஐந்து பன்னொன்றும் அன்றிச்
சகமார்க்கம்
வேறுஅன்பு வேண்டுவோர் பூவரில்
பின்னம்தோடு
ஏறும் இருபத் தொருநாள்
இடைத்தோங்கும்
ஆறின் மிகுந்தோங்கும் அக்காலம்
செய்யவே. 4

1941
செய்யும் அளவில் திருநாள்
முகூர்த்தமே
எய்யும் கலைகாலம் இந்து பருதிகால்
நையுமிடத்து ஓடி நன்கா நூல்நெறி
செய்க வலம் இடம் தீர்ந்து
விடுக்கவே. 5

1942
விடுங்காண் முனைந்துஇந் திரியங்க
ளைப் போல்
நடுங்காது இருப்பானும் ஐஐந்தும்
நண்ணப்
படுங்காதல் மாதின்பால் பற்றற
விட்டுக்
கடுங்காற் கரணம் கருத்துறக்
கொண்டே. 6

1943

கொண்ட குணனே நலமேநற்
கோமளம்
பண்டை உருவே பகர்வாய் பவளமே
மிண்டு தனமே மிடைய விடும்
போதில்
கண்ட கரணம் உட் செல்லக்கண்
டேவிடே. 7

1944

விட்டபின் கர்ப்பஉற் பத்தி விதியிலே
தொட்டுறுங் காலங்கள் தோன்றக்
கருதிய
கட்டிய வாழ்நாள் சாம்நாள் குணம்
கீழ்மைசீர்ப்
பட்ட நெறியிதுஎன்று எண்ணியும்
பார்க்கவே. 8

1945
பார்த்திட்டு வையத்துப் பரப்பற்று
உருப்பெற்று
வார்ச்செற்ற கொங்கை மடந்தையை
நீக்கியே
சேர்த்துற்று இருதிங்கள் சேராது
அகலினும்
மூப்புற்றே பின்னாளில் ஆம்எல்லாம்
உள்ளவே. 9

1946
வித்திடு வோர்க்கு அன்றி மேலோர்
விளைவில்லை
வித்திடு வோர்க்கு அன்றி மிக்கோர்
அறிவில்லை
வித்தினில் வித்தை விதற
உணர்வரேல்

மத்தில் இருந்ததோர் மாங்கனி
யாமே. 10

1947
கருத்தினில் அக்கரம் ஆயுவும்
யாவும்
கருத்துளன் ஈசன் கருஉயிரோடும்
கருத்தது வித்தாய்க் காரண காரியம்
கருத்தறு மாறுஇவை கற்பனை
தானே. 11

1948
ஒழியாத விந்து வுடன்நிற்க நிற்கும்
அழியாப் பிராணன் அதிபலஞ் சத்தி
ஒழியாத புத்தி தபஞ்செப மோனம்
அழியாத சித்தியுண் டாம்விந்து
வற்றிலே. 12

1949
வற்ற அனலைக் கொளுவி
மறித்தேற்றித்
துற்ற சுழியனல் சொருகிக் சுடருற்று
முற்று மதியத்து அமுதை
முறைமுறை
செற்றுண் பவரே சிவயோகி யாரே.
13

1950
யோகியும் ஞானியும் உத்தம
சித்தனும்
யோகியும் ஞான புரந்தரன்
ஆவோனும்
மோகம் உறினும் முறைஅமிர்து
உண்போனும்
ஆகிய விந்து அழியாத அண்ணலே.
14

1951
அண்ணல் உடலாகி அவ்வனல்
விந்துவும்
மண்ணிடை மாய்க்கும் பிராணனாம்
விந்துவும்
கண்ணும் கனலிடைக் கட்டிக்
கலந்தெரித்து
உண்ணில் அமிர்தாகி யோகிக்கு
அறிவாமே. 15

1952
அறியாது அழிகின்ற ஆதலால்
நாளும்
பொறியால் அழிந்து புலம்புகின்
றார்கள்
அறிவாய் நனவில் அதீதம் புரியச்
செறிவாய் இருந்து சேரவே வாயுமே.

16

1953
மாதரை மாய வரும் கூற்றம்
என்றுன்னக்
காதலது ஆகிய காமம் கழிந்திடும்
சாதலும் இல்லை சதகோடி
ஆண்டினும்
சோதியின் உள்ளே துரிசறும் காலமே.
17

1954
காலம் கடந்தவன் காண்விந்து
செற்றவன்
காலம் கடந்தழிந் தான்விந்து
செற்றவன்
காலங் களின்விந்து செற்றுற்ற
காரிகை

காலின்கண் வந்த கலப்பறி யாரே. 18

1955
கலக்கு நாள் முன்னாள் தன்னிடைக்
காதல்
நலத்தக வேண்டில் அந் நாரி யுதரக்
கலத்தின் மலத்தைத்தண் சீதத்தைப்
பித்தை
விலக்கு வனசெய்து மேலணை வீரே.
19

1956
மேலா நிலத்தெழு விந்துவும்
நாதமும்
கோலால் நடத்திக் குறிவழி
யேசென்று
பாலாம் அமிர்துண்டு பற்றறப்
பற்றினால்

மாலா னதுமான மாளும்
அவ்விந்துவே. 20

1957
விந்து விளைவும் விளைவின்
பயன்முற்றும்
அந்த அழிவும் அடக்கத்தில்
ஆக்கமும்
நந்திய நாசமும் நாதத்தால் பேதமும்
தந்துணர் வோர்க்குச் சயமாகும்
விந்துவே. 21

1958
விந்துஎன் வீசத்தை மேவிய மூலத்து
நந்திய அங்கிய னாலே நயந்தெரிந்து
அந்தமில் பானுஅதிகண்ட
மேலேற்றிச்
சந்திரன் சார்புறத் தண்ணமு தாமே.

1959
அமுதச் சசிவிந்து வாம்விந்து மாள
அமுதப் புனலோடி அங்கியின் மான
அமுதச் சிவயோகம் ஆதலால் சித்தி
அமுதப் பலாவனம் ஆங்குறும்
யோகிக்கே. 23

1960
யோகம் அவ் விந்து ஒழியா
வகையுணர்ந்து
ஆகம்இரண்டும் கலந்தாலும்
ஆங்குறாப்
போகம் சிவபோகம் போகிநற்
போகமா
மோகங் கெடமுயங் கார்முடர்
மாதர்க்கே. 24

1961

மாதர் இடத்தே செலுத்தினும்
அவ்விந்து
காதலி னால்விடார் யோகம்
கலந்தவர்
மாதர் உயிராசை கைக்கொண்ட
வாடுவர்
காதலர் போன்றங்ஙன் காதலாம்
சாற்றிலே. 25

1962

சாற்றிய விந்து சயமாகும் சத்தியால்
ஏற்றிய மூலத் தழலை எழமூட்டி
நாற்றிசை ஓடா நடுநாடி நாதத்தோடு
ஆற்றி அமுதம்அருந்தவித் தாமே.
26

1963

விந்துவும் நாதமும் மேலக் கனல்மூல
வந்த அனல் மயிர்க் கால்தோறும்
மன்னிடச்
சிந்தனை மாறச் சிவம்அக மாகவே
விந்துவும் மாளும்மெய்க் காயத்தில்
வித்திலே. 27

1964

வித்துக்குற் றுண்பான் விளைவுஅறி
யாதவன்
வித்துக்குற் றுண்ணாமல் வித்துச்
சுட்டு உண்பான்
வித்துகுற் றுண்பானில் வேறலன்
ஈற்றவன்
வித்துக்குற் றுண்ணாமல்
வித்துவித்தான் அன்றே. 28

1965
அன்னத்தில் விந்து அடங்கும்
படிகண்டு
மன்னப் பிராணனாம் விந்து
மறித்திட்டு
மின்னொத்த விந்துநா தாந்தத்து
விட்டிட
வன்னத் திருவிந்து மாயும் கா
யத்திலே. 29

1966
அன்னம் பிராணன்என் றார்க்கும்
இருவிந்து
தன்னை அறிந்துண்டு சாதிக்க
வல்லார்க்குச்
சொன்ன மாம்உருத் தோன்றும்எண்
சித்தியாம்
அன்னவர் எல்லாம் அழிவற

நின்றதே. 30

1967
நின்ற சிகாரம் நினைக்கும்
பிராணனாய்
ஒன்றும் மகாரம் ஒருமூன்றோடு
ஒன்றவை
சென்று பராசக்தி விந்து சயந்தன்னை
ஒன்ற உரைக்க உபதேசம் தானே. 31

1968
தானே உபதேசம் தானல்லாது
ஒன்றில்லை
வானே உயர்விந்து வந்த பதினான்கு
மானேர் அடங்க அதன்பின்பு
புத்தியும்
தானே சிவகதி தன்மையும் ஆமே. 32

1969

விந்துவும் நாதமும் விளைய
விளைந்தது
வந்தஇப் பல்லுயிர் மன்னுயி
ருக்கெலாம்
அந்தமும் ஆதியும் ஆம்மந்
திரங்களும்
விந்து அடங்க விளையும்
சிவோகமே. 33

1970

வறுக்கின்ற வாறும் மனத்துலா
வெற்றி
நிறுக்கின்ற வாறும் அந் நீள்வரை
ஒட்டிப்
பொறிக்கின்ற வாறும்அப் பொல்லா
வினையை
அறுக்கின்ற வாறும்அப் பொல்லா

வினையை
அறுக்கின்ற நாள்வரும் அத்திப்
பழமே. 34

1971
விந்துவும் நாதமும் மேவியுடன்
கூடிப்
சந்திர னோடே தலைப்படு மாயிடில்
சுந்தர வானத்து அமுதம்வந்து
ஊறிடும்
அங்குஉதி மந்திரம் ஆகுதி யாகுமே.
35

1972
மனத்தொடு சத்து மனஞ்செவி
யென்ன
இனத்தெழு வார்கள் இசைந்தன நாடி
மனத்தில் எழுகின்ற வாக்கு வசனம்

கனத்த இரதம் அக் காமத்தை
நாடிலே. 36

1973
சத்தமும் சத்த மனமும் மனக்கருத்து
ஒத்துஅறி கின்ற இடமும் அறிகிலர்
மெய்த்து அறிகின்ற இடம்அறி
வாளர்க்கு
அத்தன் இருப்பிடம் அவ்விடம்
தானே. 37

1974
உரம்அடி மேதினி உந்தியில்
அப்பாம்
விரவிய தன்முலை மேவிய
கீழ்அங்கி
கருமலை மீமிசை கைக்கீழ்ற் காலாம்
விரவிய சுந்தரம் மேல்வெளி யாமே.

## 22. ஆதித்த நிலை - அண்டாதித்தன்

1975
செஞ்சுட ரோன்முத லாகிய
தேவர்கள்
மஞ்சுடை மேரு வலம்வரு காரணம்
எஞ்சுடர் ஈசன் இறைவன் இணையடி
தஞ்சுட ராக வணங்கும் தவமே. 1

1976
பகலவன் மாலவன் பல்லுயிர்க்கு
எல்லாம்
புகலவ னாய்நின்ற புண்ணிய நாதன்
இகலற ஏழுல கும்உற வோங்கும்
பகலவன் பல்லுயிர்க்கு ஆதியும்
ஆமே. 2

1977
ஆதித்தன் அன்பினோடு ஆயிர
நாமமும்
சோதியின் உள்ளே சுடரொளி
யாய்நிற்கும்
வேதியர் வேண்டினும் விண்ணவர்
சொல்லினும்
ஆதியில் அன்பு பழுக்கின்ற வாறே.
3

1978
தானே உலகுக்குத் தத்துவனாய்
நிற்கும்
தானே உலகுக்குத் தையலு
மாய்நிற்கும்
தானே உலகுக்குச் சம்புவு
மாய்நிற்கும்

தானே உலகுக்குத் தண்சுட ராகுமே. 4

1979

வலையமுக் கோணம் வட்டம் அறுகோணம்
துலையிரு வட்டம் துய்ய விதம்எட்டில்
அலையுற்ற வட்டத்தில் ஈர்எட்டு இதழாம்
மலைவுற்று உதித்தனன் ஆதித்தன் ஆமே. 5

1980

ஆதித்தன் உள்ளி லானமுக் கோணத்தில்
சோதித்து இலங்கும்நற் சூரியன் நாலாம்
கேத முறுங்கேணி சூரியன் எட்டில்

சோதிதன் நீட்டில் சோடசம் தானே. 6

1981
ஆதித்த னோடே அவனி இருண்டது
பேதித்த நாலும் பிதற்றிக் கழிந்தது
சோதிக்குள் நின்று துடியிடை
செய்கின்ற
வேதப் பொருளை விளங்குகி லீரே.
7

1982
பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி
யாருக்கும் காணஒண் ணாத
அரும்பொருள்
நீருக்கும் தீக்கும் நடுவே உதிப்பவன்
ஆருக்கும் எட்டாத ஆதித்தன் தானே.
8

1983

மண்ணை இடந்துஅதின் கீழொடும்
விண்ணை இடந்து வெளிசெய்து
நின்றிடும்
கண்ணை இடந்து களிதந்த ஆனந்தம்
எண்ணும் கிழமைக்கு இசைந்து
நின்றானே. 9

1984

பாரை இடந்து பகலோன் வரும்வழி
யாரும் அறியார் அருங்கடை நூலவர்
தீரன் இருந்த திருமலை சூழ்என்பர்
ஊரை உணர்ந்தார் உணர்ந்திருந்
தாரே. 10

## 23. பிண்டாதித்தன்

1985

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
கன்றாய நந்திக் கருத்துள் இருந்தனன்
கொன்று மலங்கள் குழல்வழி ஓடிட
வென்று விளங்கும் விரிசுடர்
காணுமே. 1

1986
ஆதித்தன் ஓடி அடங்கும்
இடங்கண்டு
சாதிக்க வல்லவர் தம்மை
யுணர்ந்தவர்
பேதித்து உலகம் பிதற்றும்
பிதற்றெல்லாம் ஆதித்த
னோடே அடங்குகின் றாரே. 2

1987
உருவிப் புறப்பட்டு உலகை
வலம்வந்து

சொருகிக் கிடக்கும் துறையறி
வார்இல்லை
சொருகிக் கிடக்கும் துறையறி
வாளர்க்கு
உருகிக் கிடக்கும்என் உள்ளன்பு
தானே. 3

## 24. மன ஆதித்தன்

### 1988
எறிகதிர் ஞாயிறு மின்பனி சோரும்
எறிகதிர் சோமன் எதிர்நின்று எறிப்ப
விரிகதிர் உள்ளே இயங்கும் என்
ஆவி
ஒருகதிர் ஆகில் உலாஅது ஆமே. 1

### 1989
சந்திரன் சூரியன் தான்வரின் பூசனை

முந்திய பானுவில் இந்துவந்து
ஏய்முறை
அந்த இரண்டும் உபய நிலத்தில்
சிந்தை தெளிந்தார் சிவமாயி னரே. 2

1990

ஆகும் கலையோடு அருக்கன்
அனல்மதி
ஆகும் கலையிடை நான்குஎன
லாம்என்பர்
ஆகும் அருக்கன் அனல்மதி
யோடுஒன்ற
ஆகும்அப் பூரணை யாம்என்று
அறியுமே. 3

1991

ஈர் அண்டத்து அப்பால் இயங்கிய
அவ்வொளி

ஓர் அண்டத் தார்க்கும் உணரா
உணர்வது
பேர்அண்டத்து ஊடே பிறங்கொளி
யாய்நின்று
ஆர் அண்டத் தக்கார் அறியத்தக்
காரே. 4

1992
ஒன்பதின் மேவி உலகம் வலம்வரும்
ஒன்பதும் ஈசன் இயல்அறி
வார்இல்லை
முன்புஅதின் மேவி முதல்வன்
அருளிலார்
இன்பம் இலார்இருள் சூழநின் றாரே.
5

## 25. ஞானாதித்தன்

1993

விந்து அபரம் பரம்இரண்
டாய்விரிந்து
அந்த அபரம் பரநாத மாகியே
வந்தன தம்மில் பரங்கலை
யாதிவைத்து
உந்தும் அருணோ தயமென்ன
உள்ளத்தே. 1

1994

உள்ள அருணோ தயத்தெழும்
ஓசைதான்
தெள்ளும் பரநாதத் தின்செயல்
என்பதால்
வள்ளல் பரவிந்து வைகரி
யாதிவாக்கு
உள்ளன ஐங்கலைக்கு ஒன்றாம்
உதயமே. 2

1995

தேவர் பிரான்திசை பத்துஉத
யஞ்செய்யும்
மூவர் பிரான்என முன்னொரு
காலத்து
நால்வர் பிரான்நடு வாயுரை
யாநிற்கும்
மேவு பிரான்என்பர் விண்ணவர்
தாமே. 3

1996

பொய்யிலன் மெய்யன் புவனா
பதிஎந்தை
மையிருள் நீக்கும் மதிஅங்கி ஞாயிறு
செய்யிருள் நீக்கும் திருவுடை
நந்திஎன்
கையிருள் நீங்கக் கலந்தெழுந் தானே.

1997
தனிச்சுடர் ஏற்றித் தயங்கிருள் நீங்க
அனித்திடும் மேலை அருங்கனி
ஊறல்
கனிச்சுட ராய்நின்ற கயிலையில்
ஈசன்
நனிச்சுடர் மேல்கொண்ட
வண்ணமும் ஆமே. 5

1998
நேரறி வாக நிரம்பிய பேரொளி
போரறி யாது புவனங்கள்
போய்வரும்
தேரறி யாத திசையொளி யாயிடும்
ஆரறி வாரிது நாயக மாமே. 6

1999
மண்டலத் துள்ளே மலர்ந்தெழும்
ஆதித்தன்
கண்டிதத் துள்ளே கதிரொளி ஆயிடும்
சென்றிடத்து எட்டுத் திசையெங்கும்
போய்வரும்
நின்றிடத் தேநிலை நேரறி வார்க்கே.
7

2000
நாபிக்கண் நாசிநயன நடுவினும்
தூபியோடு ஐந்தும் சுடர்விடு
சோதியைத்
தேவர்கள் ஈசன் திருமால் பிரமனும்
மூவரு மாக உணர்ந்திருந் தாரே. 8

26. சிவாதித்தன்

2001

அன்றிய பாச இருளும்அஞ்
ஞானமும்
சென்றிடு ஞானச் சிவப்பர காசத்தால்
ஒன்றும் இருசட ராம்அரு ணோதயம்
துன்றிருள் நீங்குதல் போலத்
தொலைந்ததே. 1

2002

கடம் கடம் தோறும் கதிரவன்
தோன்றில்
அடங்கிட மூடில் அவற்றில்
அடங்கான்
விடங்கொண்ட கண்டனும் மேவிய
காயத்து
அடங்கிட நின்றதும் அப்பரி சாமே. 2

2003

தானே விரிசுடர் மூன்றும்ஒன்றாய்
நிற்கும்
தானே அயன்மால் எனநின்று
தாபிக்கும்
தானே உடலுயிர் வேறன்றி
நின்றுளன்
தானே வெளியொளி தானிருட்
டாமே. 3

2004
தெய்வச் சுடர்அங்கி ஞாயிறும்
திங்களும்
வையம் புனல்அனல் மாருதம்
வானகம்
சைவப் பெரும்பதி தாங்கிய
பல்லுயிர்
ஐவர்க்கு இடம்இடை ஆறங்கம்
ஆமே. 4

## 27. பசு இலக்கணம்

### 2005

உன்னும் அளவில் உணரும் ஒருவனைப்
பன்னு மறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இளையா விளக்கினை
அன்ன மயமென்று அறிந்துகொண் டேனே. 1

### 2006

அன்னம் இரண்டுள ஆற்றம் கரையினில்
துன்னி இரண்டும் துணைப்பிரி யாதுஅன்னம்
தன்னிலை அன்னம் தனியொன்றது

என்றக்கால்
பின்ன மடஅன்னம் பேறணு காதே. 2

28. புருடன்

2007
வைகரி யாதியும் மாயா மலாதியும்
பொய்கரி யான புருடாதி பேதமும்
மெய்கரி ஞானம் கிரியா விசேடத்துச்
செய்கரி ஈசன் அனாதியே செய்ததே.
1

2008
அணுவில் அணுவினை ஆதிப்
பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங்
கூறிட்டு
அணுவில் அணுவை அணுகவல்

லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலும்
ஆமே. 2

2009
படர்கொண்ட ஆலதின் வித்தது
போலச்
சுடர்கொண்டு அணுவினைத் தூவழி
செய்ய
இடர்கொண்ட பாச இருளற ஒட்டி
நடர்கொண்ட நல்வழி நாடலும்
ஆமே. 3

2010
அணுவுள் அவனும் அவனுள்
அணுவும்
கணுஅற நின்ற கலப்பது உணரார்
இணையிலி ஈசன் அவன்எங்கும்

ஆகித்
தணிவற நின்றான் சராசரம் தானே. 4

29. சீவன்

2011
மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிர்ஒன்று நூறுடன்
கூறிட்டு
மேவிய கூறது ஆயிரம் ஆயினால்
ஆவியின் கூறுநா றாயிரத்து ஒன்றே.
1

2012
ஏனோர் பெருமையின் ஆயினும்
எம்மிறை
ஊனே சிறுமையின் உட்கலந்து
அங்குளன்

வானோர் அறியும் அளவல்லன்
மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே. 2

2013
உண்டு தெளிவன் உரைக்க
வியோகமே
கொண்டு பயிலும் குணமில்லை
யாயினும்
பண்டு பயிலும் பயில்சீவ
னார்பின்னைக்
கண்டு சிவனுருக் கொள்வர்
கருத்துளே. 3

2014
மாயா உபாதி வசத்ததாகும்
சேதனத்து
ஆய குருஅரு ளாலே அதில்தூண்ட

ஒயும் உபாதியோடு ஒன்றின் ஒன்
றாது உயிர்
ஆய துரியம் புகுந்தறி வாகவே. 4

30. பசு

2015
கற்ற பசுக்கள் கதறித் திரியினும்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினும்
முற்ற பசுக்கள் ஒருகுடம்
பால்போலும்
மற்றைப் பசுக்கள் வறள்பசு தானே. 1

2016
கொல்லையின் மேயும் பசுக்களைச்
செய்வதென்
எல்லைக் கடப்பித்து இறைவன்
அடிகூட்டி

வல்லசெய்து ஆற்ற மதித்தபின் அல்லது
கொல்லை செய் நெஞ்சம் குறிப்பறி யாதே. 2

## 31. போதன் (அறிஞன்)

2017
சீவன் எனச்சிவன் என்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை அறிகிலர்
சீவ னார்சிவ னாரை அறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட்டு இருப்பரே. 1

2018
குணவிளக் காகிய கூத்தப் பிரானும்
மனவிளக் காகிய மன்னுயிர்க் கெல்லாம்
பணவிளக் காகிய பல்தலை நாகம்

கணவிளக் காகிய கண்காணி
யாகுமே. 2

2019

அறிவாய் அறியாமை நீங்கி யவனே
பொறிவாய் ஒழிந்தெங்கும் தானான
போதன்
அறிவாய் அவற்றினுள் தானாய்
அறிவன்
செறிவாகி நின்றஅச் சீவனும்
ஆகுமே. 3

2020

ஆறாறின் தன்மை அறியாது
இருந்தேனுக்கு
ஆறாறின் தன்மை அறிவித்தான்
பேர்நந்தி
ஆறாறின் தன்மை அருளால் அறிந்த

பின்
ஆறாறுக்கு அப்புறம் ஆகி நின்
றானே. 4

2021
சிவமா கியஅருள் நின்றுஅறிந்து
ஓரார்
அவமாம் மலம்ஐந்தும் ஆவது
அறியார்
தவமான செய்து தலைப்பறி கின்றார்
நவமான தத்துவம் நாடாகி லாரே. 5

2022
நாடோ றும் ஈசன் நடத்தும்
தொழில்உள்ளார்
நாடோ றும் ஈசன் நயந்தூட்டல்
நாடிடார்
நாடோ றும் ஈசன்நல் லோர்க்கருள்

நல்கலால்
நாடோ றும் நாடார்கள் நாள்வினை
யாளரே. 6

32. ஐந்து இந்திரியம் அடக்கும்
அருமை

2023
ஆக மதத்தன ஐந்து களிறுள
ஆக மதத்தறி யோடுஅணை கின்றில
பாகனும் எய்த்துஅவை தாமும்
இளைத்தபின்
யோகு திருந்துதல் ஒன்றிஅறி
யோமே. 1

2024
கருத்தின்நன் னூல்கற்று
கால்கொத்திப் பாகன்

திருத்தலும் பாய்மாத் திகைத்தன்றிப்
பாயா
எருத்துற ஏறி இருக்கிலும் ஆங்கே
வருத்தினும் அம்மா வழிநட வாதே.
2

2025
புலம் ஐந்து புள்ஐந்து புள்சென்று
மேயும்
நிலம்ஐந்து நீர்ஐந்து நீர்மையும் ஐந்து
குலம் ஒன்று கோல்கொண்டு
மேய்ப்பான் ஒருவன்
உலம்வந்து போம்வழி ஒன்பது
தானே. 3

2026
அஞ்சுள சிங்கம் அடவியல்
வாழ்வன

அஞ்சும்போய் மேய்ந்துதம்
அஞ்சுஅக மேபுகும்
அஞ்சின் உகிரும் எயிரும்
அறுத்திட்டால்
எஞ்சாது இறைவனை எய்தலும்
ஆமே. 4

2027
ஐவர் அமைச்சருள் தொண்ணூற்று
அறுவர்கள்
ஐவரும் மைந்தரும் ஆளக் கருதுவர்
ஐவரும் ஐந்த சினத்தொட நின்றிடில்
ஐவர்க்கு சிறைஇறுத்து ஆற்றகி
லோமே. 5

2028
சொல்லகில் லேன்சுடர்ச் சோதியை
நாடொறும்

சொல்லகில் லேன்திரு மங்கையும் அங்குள
வெல்லகில் லேன்புலன் ஐந்துடன் தன்னையும்
கொல்லநின் றோடும் குதிரைஒத் தேனே. 6

2029

எண்ணிலி இல்லி அடைத்துஅவ் இருட்டறை
எண்ணிலி இல்லியோடு ஏகில் பிழைதரும்
எண்ணிலி இல்லியோடு ஏகாமை காக்குமேல்
எண்ணிலி இல்லதோடு இன்பமது ஆமே. 7

2030

விதியின் பெருவலி வேலைசூழ்
வையம்
துதியின் பெருவலி தொல்வான்
உலகம்
மதியின் பெருவலி மானுடர்
வாழ்க்கை
நிதியின் பெருவலி நீர்வலி தானே. 8

33. ஐந்து இந்திரியம் அடக்கும்
முறைமை

2031
குட்டம் ஒருமுழம் உள்ளது
அரைமுழம்
வட்டம் அமைந்ததோர் வாவியுள்
வாழ்வன
பட்டன மீன்பல பரவன்
வகைகொணர்ந்து

இட்டனன் யாம்இனி ஏதம்இ
லோமே. 1

2032
கிடக்கும் உடலின் கிளர்இந் திரியம்
அடக்க லுறும் அவன்தானே அமரன்
விடக்கிண்டு இன்புற மேவுறு சிந்தை
நடக்கின் நடக்கும் நடக்கும் அளவே.
2

2033
அஞ்சும் அடக்குஅடக்கு என்பர்
அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும்
அங்கிலை
அஞ்சும் அடக்கிய அசேதன
மாம்என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவு

அறிந்தேனே. 3

2034
முழக்கி எழுவன மும்மத வேழம்
அடக்க அறிவென்றும் கோட்டையை வைத்தேன்
பிழைத்தன ஓடிப் பெருங்கேடு மண்டிக்
கொழுத்தன வேழம் குலைக்கின்ற வாறே. 4

2035
ஐந்தில் ஒடுங்கில் அகலிடம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பதம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே. 5

2036
பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தேர்
நினைந்தென்
விரித்த பொருட்கெல்லாம்
வித்தாவது உள்ளம்
பெருக்கிற் பெருக்கம் சுருக்கிற்
சுருக்கம்
அருத்தமும் அத்தனை
ஆராய்ந்துகொள் வார்க்கே. 6

2037
இளைக்கின்ற வாறுஅறிந்து
இன்னுயிர் வைத்த
கிளைக்குஒன்றும் ஈசனைக் கேடில்
புகழோன்
தளைக்கொன்ற நாகம்அஞ் சாடல்
ஒடுக்கத்
துளைக்கொண்டது அவ்வழி தூங்கும்

படைத்தே. 7

2038
பாய்ந்தன பூதங்கள் ஐந்தும்
படரொளி
சார்ந்திடும் ஞானத் தறியினில்
பூட்டிட்டு
வாய்ந்துகொள் ஆனந்தம் என்னும்
அருள் செய்யில்
வேய்ந்துகொள் மேலை விதியது
தானே. 8

2039
நடக்கின்ற நந்தியை நாடோ றும்
உன்னில்
படர்க்கின்ற சிந்தையப் பைய
ஒடுக்கிக்
குறிக்கொண்ட சிந்தை குறிவழி

நோக்கில்
வடக்கொடு தெற்கு மனக்கோயி
லாமே. 9

2040
சென்றன நாழிகை நாள்கள் சிலபல
நின்றது நீள்பொருள் நீர்மேல்
எழுத்துஒத்து
வென்று புலன்கள் விரைந்து
விடுமின்கள்
குன்று விழவதில் தாங்கலும் ஆமே.
10

2041
போற்றிசைத் துப்புனி தன்திரு
மேனியைப்
போற்றிசெய் மீட்டே புலன்ஐந்தும்
புத்தியால்

நாற்றிசைக் கும்பின்னை யாருக்கும்
நாதனை
ஊற்றுக உள்ளத்து ஒருங்கலும்
ஆமே. 11

2042
தரிக்கின்ற நெஞ்சம் சகளத்தின்
உள்ளே
அரிக்கின்ற ஐவரை யாரும் உணரார்
சிரிக்கின்ற வாறு சிலபல பேசில்
வரிக்கின்ற மைசூழ் வரையது வாமே.
12

2043
கைவிட லாவது ஒன்று இல்லை
கருத்தினுள்
எய்தி அவனை இசையினால்
ஏத்துமின்

ஐவருடைய அவாவினில் தோன்றிய
பொய்வ ருடைய புலன்களும்
ஐந்தே. 13

## 34. அசற்குரு நெறி

2044
உணர்வுஒன்று இலாமூடன்
உண்மைஒ ராதோன்
கணுவின்றி வேதா கமநெறி காணான்
பணிஒன்று இலாதோன் பரநிந்தை
செய்வோன்
அணுவின் குணத்தோன் அசற்குரு
வாமே. 1

2045
மந்திர தந்திர மாயோக ஞானமும்
பந்தமும் வீடும் தரிசித்துப் பார்ப்பவர்

சிந்தனை செய்யாத் தெளிவியாது
ஊண்பொருட்டு
அந்தகர் ஆவோர் அசற்குரு வாமே.
2

2046
ஆமாது அறியாதோன் மூடன்
அதிமூடன்
காமாதி நீங்காக் கலதி கலதிகட்கு
ஆமாறு அசத்துஅறி விப்போன்
அறிவிலோன்
கோமான் அலன்அசத் தாகும்
குரவனே. 3

2047
கற்பாய கற்பங்கள் நீக்காமற்
கற்பித்தால்
தற்பாவங் குன்றும் தனக்கே

பகையாகும்
நற்பால் அரசுக்கும் நாட்டுக்கும் கேடென்றே
முற்பால நந்தி மொழிந்துவைத் தானே. 4

## 2048

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லும் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வர்கள் முன்பின்
குருடனும் வீழ்வர்கள் முன்பின் அறவே
குருடரும் வீழ்வார் குருடரோடு ஆகியே. 5

## 35. சற்குரு நெறி

2049

தாள்தந்து அளிக்கும் தலைவனே
சற்குரு
தாள்தந்து தன்னை அறியத்
தரவல்லோன்
தாள்தந்து தத்துவா தீதத்துச் சார்சீவன்
தாள்தந்து பாசம் தணிக்கும்
அவன்சத்தே. 1

2050

தவிரவைத் தான்வினை தன்னடி
யார்கோள்
தவிரவைத் தான்சிரத் தோடுதன்
பாதம்
தவிரவைத் தான்நமன் தூதுவர்
கூட்டம்
தவிரவைத் தான் பிற வித்துயர்
தானே. 2

2051

கறுத்த இரும்பே கனகமது ஆனால்
மறித்துஇரும் பாகா வகையது
போலக்
குறித்தஅப் போதே குருவருள்
பெற்றான்
மறித்துப் பிறவியல் வந்தணு கானே.
3

2052

பாசத்தை நீக்கிப் பரனோடு
தன்னையும்
நேசத்து நாடி மலமற நீக்குவோர்
ஆசற்ற சற்குரு வாவோர் அறிவற்றுப்
பூசற்கு இரங்குவோர் போதக்
குருவன்றே. 4

2053
நேயத்தே நிற்கும் நிமலன் மலமற்ற
நேயத்தை நல்கவல் லோன்நித்தன்
சுத்தனே
ஆயத்த வர்தத் துவம் உணர்ந்
தாங்குஅற்ற
நேயர்க்கு அளிப்பவன் நீடும்
குரவனே. 5

2054
பரிசன வேதி பரிசித்தது எல்லாம்
வரிசை தரும்பொன் வகையாகு
மாபோல்
குருபரி சித்த குவலயம் எல்லாம்
திரிமலம் தீர்ந்து சிவகதி யாமே. 6

2055
தானே எனநின்ற சற்குரு சந்நிதி

தானே எனநின்ற தன்மை வெளிப்படில்
தானே தனைப்பெற வேண்டும் சதுர்பெற
ஊனே எனநினைந்து ஓர்ந்துகொள் உன்னிலே. 7

## 2056

வரும்வழி போம்வழி மாயா வழியைக்
கருவழி கண்டவர் காணா வழியைக்
பெரும்வழி யாநந்தி பேசும் வழியைக்
குருவழியே சென்று கூடலும் ஆமே. 8

## 2057

குருஎன் பவனே வேதாக மங்கூறும்

பரஇின்ப னாகிச் சிவயோகம்
பாவித்து
ஒருசிந்தை யின்றி உயிர்பாசம் நீக்கி
வருநல் குரவன்பால் வைக்கலும்
ஆமே. 9

2058
சத்தும் அசத்தும் சதசத்தும்
தான்காட்டிச்
சித்தும் அசித்தும் சிவபரத்
தேசேர்த்துச்
சுத்தம் அசுத்தம் அறச்சுக மானசொல்
அத்தன் அருட்குரு வாம்அவன்
கூறிலே. 10

2059
ஊற்றிடும் ஐம்மலம் பாச
உணர்வினை

பற்றறு நாதன் அடியில் பணிதலால்
சுற்றிய பேதம் துரியம் மூன்
றால்வாட்டித்
தற்பரம் மேவுவோர் சாதகர் ஆமே.
11

2060
எல்லாம் இறைவன் இறைவி
யுடன்இன்பம்
வலலார் புலனும் வருங்கால்
உயிர்தோன்றிச்
சொல்லா மலம்ஐந்து அடங்கிட்டு
ஓங்கியே
செலலாச் சிவகதி சேர்தல்விளை
யாட்டே. 12

2061
ஈனப் பிறவியில் இட்டது மீட்டுட்டித்

தானத்துள் இட்டுத் தனையூட்டித்
தாழ்த்தலும்
ஞானத்தின் மீட்டலும் நாட்டலும்
வீடுற்று
மோனத்துள் வைத்தலும் முத்தன்தன்
செய்கையே. 13

## 2062

அத்தன் அருளின் விளையாட்
டிடம்சடம்
சித்தொடு அசித்துஅறத் தெளிவித்த
சீவனைச்
சுத்தனும் ஆக்கித் துடைத்து
மலத்தினைச்
சத்துடன் ஐங்கரு மத்திடும்
தன்மையே. 14

## 2063

ஈசத்து வங்கடந்து இல்லையென்று அப்புறம்
பாசத்து ளேயென்றும் பாவியும் அண்ணலை
நேசத்து ளேநின்ற நின்மலன் எம்மிறை
தேசத்தை எல்லாம் தெளியவைத் தானே. 15

2064
மாணிக்க மாலை மலர்ந்தெழு மண்டலம்
ஆணிப்பொன் நின்றங்கு அமுதம் விளைந்தது
பேணிக்கொண்டு உண்டார் பிறப்பற்று இருந்த
ஊனுக்கு இருந்தார் உணராத மாக்களே. 16

2065
அசத்தொடு சத்தும் அசத்சத்து நீங்க
இசைத்திடு பாசப்பற்று ஈங்குஅறு
மாறே
அசைத்துஇரு மாயை அணுத்தானும்
ஆங்கே
இசைத்தானும் ஒன்றறி விப்போன்
இறையே. 17

2066
ஏறு நெறியே மலத்தை எரித்தலால்
ஈறில் உரையால் இருளை
அறுத்தலான்
மாறில் பசுபாசம் வாட்டலால் வீடுக
கூறு பரனே குருவாம் இயம்பிலே.
18

## 36. கூடா ஒழுக்கம்

2067
கண்காணி இல்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களஒழிந் தாரே. 1

2068
செய்தான் அறியும் செழுங்கடல் வட்டத்துப்
பொய்தான் மிகவும் புலம்பும் மனிதர்கள்
மெய்தான் உரைக்கில்விண் ணோர்

தொழச் செய்வான்
மைதாழ்ந்து இலங்கும் மிடறுடை
யோனே. 2

2069
பத்துவிற் றுண்டு பகலைக் கழிவிடும்
மத்தகர்க்கு அன்றோ மறுபிறப்பு
உள்ளது
வித்துக்குற் றுண்டு விளைபுலம்
பாழ்செய்யும்
பித்தர்கட்கு என்றும் பிறப்பில்லை
தானே. 3

2070
வடக்கு வடக்கென்பர்
வைத்ததுஒன்று இல்லை
நடக்க உறுவரே ஞானமி ல்லாதார்
வடக்கில் அடங்கிய வையகம்

எல்லாம்
அகத்தில் அடங்கும் அறிவுடை
யோர்க்கே. 4

2071
காயக் குழப்பனைக் காயநன்
னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற
நந்தியைத்
தேயத்து ளேஎங்கும் தேடித்
திரிவர்கள்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே. 5

2072
கண்காணி யாகவே கையகத்
தேயெழும்
கண்காணி யாகக் கருத்துள்
இருந்திடும்

கண்காணி யாகக் கலந்து
வழிசெய்யும்
கண்காணி யாகிய காதலன் தானே. 6

2073
கன்னி ஒருசிறை கற்றோர் ஒருசிறை
மன்னிய மாதவம் செய்வோர்
ஒருசிறை
தன்னியல்பு உன்னி உணர்ந்தோர்
ஒருசிறை
என்னிது ஈசன் இயல்புஅறி யாரே. 7

2074
காணாத கண்ணில் படலமே
கண்ணொளி
காணாத வர்கட்கும் காணாதது
அவ்வொளி
காணாத வர்கட்கும் கண்ணாம்

பெருங்கண்ணைக்
காணாது கண்டார் களவொழிந் தாரே.
8

2075
பித்தன் மருந்தால் தெளிந்து பிரகிருதி
உய்த்தொன்று மாபோல் விழியும் தன்
கண்ணொளி
அத்தன்மை யாதல்போல் நந்தி
அருள்தரச்
சித்தம் தெளிந்தோன் செயல்
ஒழிந்தேனே. 9

2076
பிரான்பல மாகப் பெயர்ந்தன எட்டும்
பராமயம் என்றெண்ணிப் பள்ளி
யுணரார்
சுராமயம் முன்னிய சூழ்வினை

யாளர்
நிராமய மாக நினைப் பொழிந் தாரே.
10

2077
ஒன்றுஇரண் டாகிநின்று ஒன்றிஒன்
றாயினோர்க்கு
ஒன்றும் இரண்டும் ஒருகாலும்
கூடிடா
ஒன்றுஇரண்டு என்றே உரைதரு
வோர்க்கெலாம்
ஒன்றுஇரண் டாய் நிற்கும்
ஒன்றோடுஒன் றானதே. 11

2078
உயிரது நின்றால் உணர்வுஎங்கு
நிற்கும்
அயர்அறி வில்லையால் ஆருடல்

வீழும்
உயிரும் உணலும் ஒருங்கிக்
கிடக்கும்
பயிரும் கிடந்துள்ளப் பாங்கு அறி
யாரே. 12

2079
உயிரது வேறாய் உணர்வுஎங்கும்
ஆகும்
உயிரை அறியில் உணர்வுஅறி
வாகும்
உயிர்அன்று உடலை விழுங்கும்
உணர்வை
அயரும் பெரும்பொருள் ஆங்கறி
யாரே. 13

2080
உலகாணி ஒண்சுடர் உத்தம சித்தன்

நிலவாணி ஐந்தினுள் தேருற நிற்கும்
சிலவாணி யாகிய தேவர் பிரானைத்
தலைவாணி செய்வது தன்னை
அறிவதே. 14

2081
தான்அந்த மாம்என நின்ற தனிச்சுடர்
ஊன்அந்த மாய்உல காய்நின்ற
ஒண்சுடர்
தேன்அந்த மாய்நின்று சிற்றின்பம்
நீஒழி
கோன்அந்தம் இல்லாக் குணத்தரு
ளாமே. 15

2082
உன்முத லாகிய ஊன்உயிர்
உண்டெனும்
கல்முதல் ஈசன் கருத்தறி வார்இல்லை

நல்முதல் ஏறிய நாமம் அறநின்றால்
தன்முதல் ஆகிய தத்துவம் ஆமே. 16

2083
இந்தியம் அந்தக் கரணம்
இவைஉயிர்
வந்தன சூக்க உடலன்று மானது
தந்திடும் ஐவிதத் தால்தற் புருடனும்
முந்துளம் மன்னும் ஆறாறு
முடிவிலே. 17

37. கேடு கண்டு இரங்கல்

2084
வித்துப் பொதிவார் விரைவிட்டு
நாற்றுவார்
அற்றதம் வாணாள் அறிகிலாப்
பாவிகள்

உற்ற வினைத்துயர் ஒன்றும்
அறிகிலார்
முற்றொளி தீயின் முனிகின்ற வாறே.
1

2085
போது சடக்கெனப் போகின்
றதுகண்டும்
வாதுசெய் தென்னோ மனிதர்
பெறுவது
நீதியு ளேநின்று நின்மலன்
தாள்பணிந்து
ஆதியை அன்பில் அறியகில்
லார்களே. 2

2086
கடன்கொண்டு நெற்குத்துக் கையரை
உடம்பினை ஓம்பி உயிராத் திரிவார்

தடங்கொண்ட சாரல் தழல்முரு டேறி
இடங்கொண்டு உடலார் கிடக்கின்ற
வாறே. 3

2087

விரைந்தன்று நால்வர்க்கு மெய்ப்பதி
சூழ்ந்து
புரந்தகல் லால்நிழல் புண்ணியன்
சொன்ன
பரந்தன்னை ஓராப் பழிமொழி யாளர்
உரந்தன்மை யாக ஒருங்கிநின்
றார்களே. 4

2088

நின்ற புகழும் நிறைதவத்து
உண்மையும்
என்றுஎம் ஈசன் அடியவர்க்
கேநல்கும்

அன்றி உலகம் அதுஇது தேவுஎன்று
குன்றுகை யாலே குறைப்பட்ட
வாறே. 5

2089
இன்பத்து ளேபிறந்து இன்பத்து
ளேவளர்ந்து
இன்பத்து ளேநினைக் கின்றது
இதுமறந்து
துன்பத்து ளேசிலர் சோறொடு
கூறையென்று
துன்பத்து ளேநின்று தூங்குகின்
றார்களே. 6

2090
பெறுதற்கு அரிய பிறவியைப்
பெற்றும்
பெறுதற்கு அரிய பிரானடி பேணார்

பெறுதற்கு அரிய பிராணிகள்
எல்லாம்
பெறுதற்கு அரியதோர் பேறுஇழந்
தாரே. 7

2091
ஆர்வ மனமும் அளவில் இளமையும்
ஈரமும் நல்லஎன்று இன்புறு காலத்துத்
தீர வருவதோர் காமத் தொழில்நின்று
மாதவன் இன்பம் மறந்தொழிந்
தார்களே. 8

2092
இப்பரி சேஇள ஞாயிறு போலுரு
அப்பரிசு அங்கியின் உள்ளுறை
அம்மானை
இப்பரி சேகம லத்துறை ஈசனை
மெய்ப்பரி சேவினை வாதுஇருந்

தோமே. 9

2093
கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு
நாடகில் லார்நயம் பேசித் திரிவர்கள்
பாடகில் லார்அவன் செய்த
பரிசறிந்து
ஆடவல் லார்அவர் பேறெது வாமே.
10

2094
நெஞ்சு நிறைந்தங்கு இருந்த
நெடுஞ்சுடர்
நம்செம் பிரான்என்று நாதனை
நாடொறும்
துஞ்சும் அளவும் தொழுமின்
தொழாவிடில்
அஞ்சுஅற்று விட்டதோர் ஆனையும்

ஆமே. 11

2095
மிருக மனிதர் மிக்கோர் பறவை
ஒருவர்செய்து அன்புவைத்து
உன்னாதது இல்லை
பருகுவர் ஓடுவர் பார்ப்பயன்
கொள்வர்
திருமருவு மாதவம் சேர்ந்துஉணர்ந்
தோரே. 12

2096
நீதியி லோர்பெற்ற பொன்போல்
இறைவனைச்
சோதியி லாரும் தொடர்ந்துஅறி
வாரில்லை
ஆதி பயனென்று அமரர் பிரான்என்ற
நாதியே வைத்தது நாடுகின் றேனே.

13

2097
இருந்தேன் மலர்அளைந்து இன்புற
வண்டு
பெருந்தேன் இழைக்கின்ற
பெற்றிமை ஓரார்
வருந்தேன் நுகராது வாய்புகு தேனை
அருந்தேனை யாரும் அறியகி லாரே.
14

2098
கருத்தறி யாது கழிந்தன காலம்
அருத்தியுள் ளான்அம ராபதி நாதன்
ஒருத்தன்உள் ளான் உல கத்துயிர்க்கு
எல்லாம்
வருத்திநில் லாது வழுக்கின் றாரே.
15

2099

குதித்தோடிப் போகின்ற கூற்றமும் சார்வாய்
விதித்தென நாள்களும் வீழ்ந்து கழிந்த
விதிர்திருந்து என்செய்தீர் ஆறுதிர் ஆகில்
கொதிக்கின்ற கூழில் துடுப்பிட லாமே. 16

2100

கரைஅருகு ஆறாக் கழனி வளைந்த
திரைஅரு காமுன்னம் சேர்ந்தின்பம் எய்தும்
வரைஅருகு ஊறிய மாதவ நோக்கின்
நரைஉரு வாச்செல்லும் நாள்கில வாமே. 17

2101
வரவுஅறி வானை மயங்கிருள்
ஞாலத்து
இரவுஅறி வானை எழுஞ்சுடர்ச்
சோதியை
அரவுஅறி வார்முன் ஒருதெய்வம்
என்று
விரவுஅறி யாமலே மேல்வைத்த
வாறே. 18

## 38. இதோபதேசம்

2102
மறந்தொழி மண்மிசை மன்னாப்
பிறவி
இறந்தொழி காலத்தும் ஈசனை
உள்கும்

பறந்துஅல மந்து படுதுயர் தீர்ப்பான்
சிறந்த சிவநெறி சிந்தைசெய் யீரே. 1

2103
செல்லும் அளவு செலுத்துமின்
சிந்தையை
வல்ல பரிசால் உரைமின்கள்
வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுளன்
எம்மிறை
நல்ல அரநெறி நாடுமின் நீரே. 2

2014
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை
நாணாமே
சென்றே புகுங்கதி இல்லைநும்
சித்தத்து

நின்றே நிலைபெற நீர்நினைந்துய்
மினே. 3

2105
போற்றிசெய் அந்தண் கயிலைப்
பொருப்பனை
நாற்றிசைக் கும்நடு வாய்கின்ற
நம்பனைக்
காற்றிசைக் கும் கமழ்ஆக்கையைக்
கைக்கொண்டு
கூற்றுதைத் தான்தன்மைக் கூறிநின்று
உய்ம்மினே. 4

2106
இக்காயம் நீக்கி இனியொரு
காயத்தில்
புக்கும் பிறவாமல் போய்வழி
நாடுமின்

எக்காலத்து இவ்வுடல் வந்துஎமக்கு
ஆனதென்று
அக்காலம் உன்ன அருள்பெற லாமே.
5

2107
போகின்ற வாறே புகுகின்ற
அப்பொருள்
ஆகின்ற போதும்
அரன்அறிவான்உளன்
சாகின்ற போதும் தலைவனை
நாடுமின்
ஆகின்ற அப்பொருள் அக்கரை
ஆகுமே. 6

2108
பறக்கின்ற ஒன்று பயனுற வேண்டின்
இறக்கின்ற காலத்தும் ஈசனை

உள்கும்
சிறப்பொடு சேரும் சிவகதி பின்னைப்
பிறப்பொன்றும் இலாமையும் பேருல காமே. 7

2109
கூடியும் நின்றும் தொழுதுஎம் இறைவனைப்
பாடியுளே நின்று பாதம் பணிமின்கள்
ஆடியு ளேநின்று அறிவுசெய் வார்கட்கு
நீடிய ஈற்றுப் பசுவது ஆமே. 8

2110
விடுகின்ற சிவனார் மேல்எழும் போது
நடுநின்று நாடுமின் நாதன்தன் பாதம்

கெடுகின்ற வல்வினை கேடில்
புகழோன்
இடுகின்றான் உம்மை இமையவ
ரோடே. 9

2111
ஏறுடை யாய்இறை வாஎம்பி
ரான்என்று
நீறிடு வார்அடி யார்நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சுடை அண்ணல்
திருவடி
வேறுஅணி வார்க்கு வினையில்லை
தானே. 10

2112
இன்புறு வீர்அறிந் தேஎம்
இறைவனை
அன்புறு விர்தவம் செய்யும்மெய்ஞ்

ஞானத்து
பண்புறு வீர்பிற வித்தொழி லேநின்று
துன்புறு பாசத்து உழைத்துஒழிந் தீரே. 11

2113
மேற்கொள்ள லாவதோர்
மெய்த்தவம் ஒன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர்
மெய்த்தாளும் ஒன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்ந்நெறி
ஒன்றுண்டு
மேற்கொள்ள லாம்வண்ணம்
வேண்டிநின்றோர்க்கே. 12

2114
சார்ந்தவர்க்கு இன்பம் கொடுக்கும்
தழல்வண்ணன்

பேர்ந்தவர்க்கு இன்னாப் பிறவி
கொடுத்திடும்
கூர்ந்தவர்க்கு அங்கே
குரைகழல்காட்டிடும்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர்
வாரே. 13

2115
முத்தியை ஞானத்தை முத்தமிழ்
ஓசையை
எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை
நெய்த்தலைப் பால்போல் நிமலனும்
அங்குளன்
அத்தகு சோதி அதுவிரும் பாரே. 14

2116
நியமத்த னாகிய நின்மலன் வைத்த
உகம்எத் தனையென்று ஒருவரும்

தேறார்
பவமத்தி லேவந்து பாய்கின்றது
அல்லால்
சிவமத்தை ஒன்றும் தெளியகில்
லாரே. 15

2117
இங்கித்தை வாழ்வும் எனைத்தோர்
அகிதமும்
துஞ்சொத்த காலத்துத் தூய்மணி
வண்ணனை
விஞ்சத்து உறையும் விகிர்தா
எனநின்னை
நஞ்சுஅற் றவர்க்குஅன்றி நாடஒண்
ணாதே. 16

2118
பஞ்சமும் ஆம்புவி

சற்குருபால்முன்னி
வஞ்சகர் ஆனவர் வைகில்
அவர்தம்மை
அஞ்சுவன் நாதன் அருநர கத்துஇடும்
செஞ்சநிற் போரைத் தெரிசிக்கச்
சித்தியே. 17

2119

சிவனை வழிபட்டார் எண்ணிலாத்
தேவர்
அவனை வழிபட்டங்கு ஆமாறுஒன்
றில்லை
அவனை வழிபட்டங்கு ஆமாறு
காட்டும்
குருவை வழிபடின் கூடலும் ஆமே.
18

2120

நரரும் சுரரும் பசுபாசம்நண்ணிக்
கருமங்க ளாலே கழிதலில் கண்டு
குருஎன் பவன்ஞானி கோதிலன்
ஆனால்
பரம்என்றல் அன்றிப் பகர்ஒன்றும்
இன்றே. 19

2121
ஆட்கொண் டவர்தனி நாயகன்
அன்புற
மேற்கொண்டவர்வினை போயற
நாடொறும்
நீர்க்கின்ற செஞ்சுடை நீளன்
உருவத்தின்
மேற்கொண்ட வாறுஅல்லை வீவித்து
ளானே. 20

ஏழாம் தந்திரம் முற்றிற்று